ஈஸ்ரர் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 07 | திகதி : 17.04.2022 | விலை : 50.00

## இயேசுவின் பாஸ்கா புதிய வாழ்வையும் நம்பிக்கையையும் எமக்குத் தருகின்றது

### ஈஸ்ரர் செய்தியில் யாழ். ஆயர்



*இறை இயேசுவில் அன்புமிகு இறைமக்களே!*

இன்று இலங்கைத் தீவு ஒருபோதும் இல்லாத அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்குள் உள்ளாகியுள்ளது. இப் பொருளாதார நிலைமையானது இன மத வேறுபாடின்றி அனைத்து மக்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது. சாதாரண இயல்பு வாழ்க்கை வாழ முடியாத நிலையில் அனைத்துத் தரப்பினரும் இன்று வீதிக்கு இறங்கிப் போராடும் ஓர் அவல நிலையில் உள்ளோம்.

நாம் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலான காலப்பகுதியில் பல சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்திருந்தோம். எமக்கென்று ஓர் அனுபவம் உண்டு. நாம் எச்சூழ்நிலையிலும் எமது வாழ்வியல் மீதும் இறைவன் மீதும் கொண்ட நம்பிக்கையை இழக்கவில்லை. இதுவும் ஒரு நாள் கடந்து செல்லும் என்ற மன உறுதியுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். ☞ 11

தொலைந்துபோன திசைதேடி
அலைந்து கொள்ளும்
புதிய 'ஊதாரி மைந்தர்களும்'
ஜெரிக்கோ வீதியில் குற்றுயிராய்
நீண்டகாலம் குருதி உறைந்த
தாவீதுகளும்
வீதியை நிறைத்துள்ளார்கள்

புதிய தழும்புகள் மீதெழுந்த
வலிகள்
கனவு நாயகர்களையும்
காலால் மிதிக்கச்செய்கிறது

நெருப்போடு விளையாடிய முதிர்ச்சியில்
சருகெனக் கடந்து செல்கிறது
நவீன அவஸ்தைகளை
ஒரு கூட்டம்

வெளியே எங்கும் இருள்
உணவுக்காக ஓடுபவர்கள்
போதிமர ஞான
பச்சாத்தாப மனதுடன்
இன்று

புலரும் காலைக்கான
தாகம்
அலைகளென எழுகிறது
மனக்கடலில்

இது கோலியாத்துக்கள் வீடுபோவதால் அல்ல
வக்கிர உணர்வுகளின்
கற்களை புரட்டுவதாலும்
உயிர்த்த இயேசுவின்
பரிசுத்த பிறரன்பை பருகுவதாலும் மட்டுமே
தீரும்

- அருட்பணி. S. A . அருட்செல்வன்




காவலன் வாசக நெஞ்சங்களுக்கு
ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்
2022

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## முப்பது வருடப் போரின் விளைவுகளே இன்றைய பொருளாதார நெருக்கடி

அரசன் மக்களுக்காக மக்கள் அரசனுக்காக என்ற அரசியல் விஞ்ஞானக் கோட்பாட்டின் உண்மை மகத்துவம் மதிக்கப்பட வேண்டும். அரசின் தோற்றம் பற்றிய கோட்பாட்டாளர்களில் ஒருவரான அறிஞர் ரூசோ, 'ஒருவனுக்காக எல்லோரும், எல்லோருக்காக ஒருவனும்' என்கிறார். ரூசோ வின் இக் கருத்தே உலகத்தில் ஜனநாயகத்தைத் தோற்றுவித்தது.

இன்று உலகில் உள்ள நவீன அரசுகளிடம் ஜனநாயகத் தன்மை காணப்பட்டாலும் அவ்வப்போது ஒரு வகையான சர்வாதிகாரப் போக்கும் உள்ளது. ஆனால் இச் சர்வாதிகாரத் தன்மை என்பது வல்லாதிக்க நாடுகள் அல்லது பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளிடம் இருக்கலாம்.

ஆனால் இலங்கை போன்ற பொருளாதாரக் குறைவளர்ச்சியுள்ள நாடுகளில் ஜனநாயகத்துடன் கூடிய சிறிய சர்வாதிகாரம் இருந்தால்கூட, அது மக்களைப் பாதிக்கும். மக்களை 'வீதிக்கு இறங்கிப் போ' என்று சொல்லும் ஆபத்தும் உருவாகும்.

அரசியல் விஞ்ஞானக் கோட்பாட்டாளர்கள் இதற்குப் பல உதார ணங்களை முன்வைத்திருக்கிறார்கள். ஜனநாயகத்துக்கு மாறாகச் செயற் பட்ட மியன்மார் போன்ற நாடுகள் இன்று அனுபவிக்கும் துன்பங்கள், பொரு ளாதார நலிவுகள் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். இந்த நவீன யுகத்தில் இதைவிட வேறு உதாரணங்கள் இலங்கைக்குக் கிடைக்காது.

பொருளாதார அபிவிருத்தியே இல்லாத சோமாலியா மற்றுமொரு சிறந்த உதாரணம். ஆகவே முப்பது ஆண்டுகாலப் போரின் நீட்சி தான் 2009 இல் நடத்தப்பட்ட இறுதிப்போரும் அதன் விளைவுகளும்.

ஆகவே தொடர்ச்சியாகப் போரை நடத்திய அனைத்துச் சிங்களக் கட்சிகளும் இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் விலை வாசி உயர்வுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

போருக்காகச் செலவிடப்பட்ட நிதி பற்றிய முழுமையான விபரங்களை எந்தவொரு சிங்களக் கட்சியும் இன்றுவரை பகிரங்கப்படுத்தவேயில்லை. போருக்குச் செலவிடப்பட்ட விபரங்கள் இதுவரை நாடாளுமன்றத்தில் முழுமை யாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் தெரியவில்லை. சமர்ப்பிக்குமாறு எவரும் வலியுறுத்தவுமில்லை.

2009 இன் பின்னரான கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளிலும்கூட வடக்குக் கிழக்குத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்குரிய எந்தவொரு தீர்வையும் சிங்கள ஆட்சியாளர்கள் முன்வைக்கவேயில்லை. அதாவது முப்பது ஆண்டுகாலப் போருக்குக் காரணமான அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகள் பரிந்துரைக்கப்படவேயில்லை.

அத்துடன் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவின் உள்ளூர் சுயபொருளாதார கட்டமைப்புகளை ஊக்குவிக்கும் செயற்திட்டங்கள்கூட வகுக்கப்படவுமில்லை. வடக்குக் கிழக்கில் ஒப்பாசாரத்துக்காக முன்மொழியப் பட்ட சில அபவிருத்தித் திட்டங்கள் அப்படியே கிடப்பில் போடப்பட்டுமுள்ளன.

ஆனால் வடக்குக் கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களின் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டமை, புத்த விகா ரைகள் அமைக்கப்பட்டமை போன்ற சிங்கள மயமாக்கல் மாத்திரமே நாளுக்கு நாள் புனரமைப்பு என்ற போர்வையில் வெவ்வேறு வடிவங்களில் தீவிரப்படுத்தப்பட்டு வந்தன.

இதற்கு வசதியாகவே இராணுவ முகாம்களும் விஸ்தரிக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டன. வீதிகளும் செப்பனிடப்பட்டன. கடந்த ஆண்டு நவம் பர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 37 ஆயிரம் கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுமிருந்தன.

அதாவது 2009 ஆம் ஆண்டு போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்ன ரானபன்னிரெண்டுஆண்டுகளிலும்பாதுகாப்புஅமைச்சுக்குஒதுக்கப்பட்டிருந்த நிதி சிங்கள மயமாக்கலை மையமாகக் கொண்டே அமைந்தன என்பது கண்கூடு. இதனைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பகிரங்கமாக வெளிப்படுத்தியுமுள்ளனர்.

ஆனால் வடக்குக் கிழக்கில் சிங்கள மயமாக்கல் பற்றி எந்த வொரு சிங்கள அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் வாய்திறந்து கண்டிக்கவே யில்லை. இருந்தாலும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென சும்மா ஒப்பாசாரத்துக்கு அவ்வப்போது நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவார்கள். நீலிக்கண்ணீரும் வடித்திருக்கின்றனர்.

ஆகவே இதன் பின்புலத்திலேதான் இலங்கைத்தீவு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வுகள் குறித்து விவாதிக்க வேண்டும்.

வெறுமனே தற்போதைய அரசாங்கத்தை மாற்றிவிட்டால் பொரு ளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுப் பிரச்சினைகள் தீர்ந்து விடுமெனச் சிங்கள மக்கள் நம்புவது அடிப்படையில் தவறானது.

அத்தோடு 1947 ஆம் ஆண்டில் இருந்து சிங்கள இனவாதத்தை மூலதனமாக்கிக் கையாண்ட அரசியல் பொருளாதார உத்திகளே, தற்போதைய இந்த அவல நிலைக்குக் காரணம் என்பதைப் பகிரங்கப்படுத்துவதும் அவசியம்.

எனவே தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைக்கான அடிப்படை மூலம் என்பது முப்பது ஆண்டுகாலப் போரும் அதற்காகச் செலவிடப்பட்ட நிதி மற்றும் அமரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் புவி சார் நலன், இந்தியாவின் அரசியல் தேவை போன்ற காரணிகளும் ஒரே புள்ளியில் அமைந்ததன் விளைவுதான் என்பதைப் போராட்டத்தில் ஈடுபடும் சிங்கள மக்கள் அம்பலப்படுத்துவார்களா?

**இலங்கைத் தீவினை மூடியுள்ள**
**இனத்துவேசக் கற்களைப் புரட்டி**
**இயேசுவை உயிர்ப்பிப்போம்.**

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ் மறைமாவட்டத்தில் அரங்கேறிய முப்பெரும் திருப்பாடுகளின் ஆற்றுகைகள்

## உரும்பிராயில் திருப்பாடுகளின் காட்சி




பரிசுத்த வாரத்தை முன்னிட்டு உரும் பிராய்ப்பங்குமக்கள்இணைந்துஇயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை "கறைதுடைத்த குருதி "எனும் பெயரில் 06.04.2022 புதன்கிழமைஅன்றுமேடையேற்றினர்.

ஏறத்தாழ 120 அடிநீள மேடையில் 100 கலைஞர்கள் மேற்படி கலைப் படைப்பை வழங்கியிருந்தனர். பங்குத்தந்தை அருட்பணி. S.A.அருட்செல்வன்அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு மறைமாவட்டக் குரு முதல்வர் ஆசியுரை வழங்கியிருந்தார். ஆரம்ப நிகழ்வாக யாழ் திருமறைக் கலாமன்றத்தை உரும் பிராய்ப் பங்கின் இளையோரால் ஆரம்பித்த முன்னாள் பங்குத்தந்தை அருட்பணி மரிய சேவியர் அடிகளாரின் திருஉருவப்படத்திற்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் மேற்படி ஆற்றுகை அருட்தந்தை அவர்க ளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வின் சிறப்பம்சம் யாதெனில் மேடை அமைப்பு முதற்கொண்டு காட்சியமைப்பு, பாடல்கள், இசை அமைப்பு, நடித்த கலைஞர்கள், நடன இயக்கம், மேடை ஓவிய அலங்காரக் கலைஞர்கள் அனைவருமே உரும்பிராய் பங்கைச் சேர்ந்தவர்கள்.

இவ் ஆற்றுகையை உரும்பிரா யைச் சேர்ந்த திரு.செல்வநாயகம் ஜெலா கன் அவர்கள் எழுதி நெறிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான குருக்கள், அருட் சகோதரிகள், அயல் ஆலய மக்கள் என ஏறத்தாழ ஆயிரம் பேர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மாலை 7.45 மணி யளவில் ஆரம்பித்த இத்திருப்பாடுகளின் காட்சி இரவு 10.45 மணியளவில் நிறைவு பெற்றது.

## நாரந்தனையில் திருப்பாடுகளின் காட்சி



நாரந்தனைப் பங்கில் "விடுதலைக் குருதி" எனும் தவக்கால ஆற்றுகை மிகப் பிரமாண்ட மான அளவிலே மேடையேற்றப்பட்டது. அருட்பணி அஜந்தன் அடிகளாரின் எழுத்து நெறியாள்கையில் உருவான இவ்வாற்றுகையை ஏராளமான மக்கள் கண்டு இறை அனுபவத்தைப் பெற்றனர். இவ்வாற்றுகையில் இப்பங்கைச் சேர்ந்த 65க்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்றமை சிறப்பம்சமாகும்.

## யாழ். திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி



திருமறைக் கலாமன்றம் தயாரித்தளித்த 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

திருமறைக் கலாமன்ற ஸ்தாபக இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளின் எழுத்துரு வில் உருவாகிய இந்நாட கத்தின் நெறியாள்கையை இம் முறை மன்றத்தின் நாடகப் பொறுப்பாளரும் பெண் நாடகக் கலைஞருமான திருமதி வைதேகி செல்மர் எமில் மேற்கொண்டிருந் தார். பல்லாயிரக்கணக்கான மக் கள்இவ்வாற்றுகையைப்பார்வை யிட்டிருந்தார்கள்.

## 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' (MCs) கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை, உயர் பட்டப்படிப்புகள் பீடம்மூலமாக 'கிறிஸ்தவ கற்கைகளில் முதுமாணி' (MCs) எனும் உயர் பட்டப்படிப்பை அறிமுகம் செய்துள்ளது. இக்கற்கை நெறி ஓராண்டு காலத்திற்குரிய வார இறுதிகளில் நடை பெறும் சுயநிதிக் கற்கைநெறியாகும். இக்கற்கை நெறிக்கு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து கிறிஸ்தவ சமயம் அல்லது இறையியல் சார்ந்த இளமாணிப்பட்டம் பெற்றவர்கள், எத் துறையிலாவது இளமாணிப்பட்டம் பெற்று குறிப்பிட்ட கால சமூகசேவை அல்லது மறைப்பணி அனுபவம் உள்ளவர்களுடன், இளமாணிப் பட்டம் பெற்றிராத பின்வருவோரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்:

நிரந்தர மறையாசிரியர்கள் பத்து ஆண்டுகளுக்குக் குறையாத முழுநேர மறைக் கல்வி கற்பித்தல் அனுபவம் உள்ளவர்கள், தேசிய மறையாசிரியர் சான்றிதழ் கற்கையின் மூன்று நிலைகளிலும் சித்தியெய்தியவர்கள், துறவிகள், உருவாக்க சான்றிதழ் பயிற்சி யைப் பூர்த்தி செய்த இருபால் துறவியர், இருபது ஆண்டுகளுக்குக் குறையாத பணியனு பவம் உள்ள இருபால் துறவியர் மற்றும் அருட்பணியாளர்கள் இக்கற்கை நெறிக்கு விண் ணப்பிக்கலாம் என கிறிஸ்தவ நாகரிகத் துறைத் தலைவர் அருட்கலாநிதி J.C.போல் றொகான் அடிகளார் காவலனுக்குத் தெரிவித்தார்.

# வாழ்வு தான் தெரிவு

நகங்களும், முடிகளும் செத்த பின்னரும் கொஞ்ச நாள் வளருமென்பார்கள். வேறெதுவும் வளர்வதில்லை. மெய்மமும் (உடலில் ஆக்க மூலப்பொருளும்), மனமும் இதயமும் (இரத்த ஓட்டமும்) வளர்வதை நிறுத்தும் பொழுது சாவு. மனத்தையும் உடலையும் இணைக்கக் கூடிய மூச்சு நின்றுவிடும் பொழுது சாவு. இதுமட்டுமல்ல, 'வாழ்விலும் சாவு' என் றொண்டு அதாவது, மனத்தளர்ச்சினால் ஏற்படும் ஓர் உளவளக் கோளாறும், (dementia) தாவரங்கள் போல் வாழ்வதும் (Vegitative) ஒரு வகைச் சாவுதானே!? இதையே, "வாழ் வில் சாதல்" என அழைப்பதும் உண்டு.

மேற்கொண்டு வளராத உறவு களும் ஒரு வகைச் சாவுதான். மேற் கொண்டு வளராததும் சாவுதான். இப் படிப்பட்ட சாவுகளினாலேயே நாம் சாவுக் குப் பயப்படுகின்றோம்.

இதனால் தான் என்னவோ, **நாம் சாகமாட்டோம் என்ற ஒரு மாஜையில் பலர் வாழ்கிறார்கள்.** இதனைத் தெளிவாகக் கூறாவிட்டாலும் நாம் வாழும் முறைகளைப் பார்த்தால், இந்த மாயை தெளிவாகும். உதாரணம்: பணத்தை மேலும் மேலும் சேர்த்து வைப்போர், சொத்துக்களைச் சேகரிப்போர், சர்வாதிகாரிகள், பதவியில் இருந்து விடுபட முடியாதவர்கள் இந்த மாயையிலிருந்து வெளிவர விரும்பாத வர்கள். உண்மையை ஏற்பதுதான் மனித பக்குவம். அதுவே யதார்த்தமு மாகும்.

### சாவுக்கு ஒரு சவால்!

புனித பவுல் கொரிந்திய மக்க ளுக்கு எழுதிய திருமுகத்தில் சொல்லுகின் றார் : "இதோ ஒரு மறைபொருளை உங்க ளுக்குச் சொல்கிறேன் நாம் யாவரும் சாகமாட்டோம்; ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம் ஒரு நொடிப் பொழு தில், கண் இமைக்கும் நேரத்தில், இறுதி எக்காளம் முழங்கும் பொழுது இது நிகழும். எக்காளம் முழங்கும் பொழுது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிரு டன் எழுப்பப்படுவர்: நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில் அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும்போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும்: "சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது. சாவே! உன் வெற்றி எங்கே? சாவே! உன் கொடுக்கு எங்கே"? என்று மறை நூலை மேற்கோள் காட்டி "பாவமே சாவின் கொடுக்கு" என்று பவுல் எழுதியுள்ளார். (1 கொரி 15:51-54)

பவுல் சாகாமையையும் சாவை யும் பற்றிப் பேசும்பொழுது- அதை "மறை பொருள்" என்று விழிக்கின்றார். பின்னர் "மாற்றுரு பெறுவோம்" என்றார். பின்னர், "இறுதி எக்காளம்" என்று ஒரு நேரத்தைக் குறிப்பிட்டார். இறுதி யில் சாவுக்கு சாவு மணி அடிப்பதுபோல் சாவுக்கு சவால் விட்டு "பாவமே சாவுக்குக்



காரணம்" என்று எழுதி முடித்தார்.

இதையே மையப்படுத்தி சாவுச் சடங்குகளில் "சாவொன்றுமில்லை" என்ற தோரணையில் பேசுவதுண்டு. "சாவு அடுத்த அறைக்குப் போவதுபோல" சாவுச் சடங்குகளில் பேசுவார்கள். இப்படிப்பட்ட உரைகள் சாவை மறுப்பது போலத் தோன்றும்! ஆனால், இயேசுவின் இறுதி வேளைகளைப் பார்த்தால் இயேசு கூட சாவை விரும்பவில்லை. ஏன் சாவின் கொடுமைக்குப் பயந்தார் என்று சொல்லு மளவிற்கு அவரது கெத்சமனித் தோட்டத்து செபம் அமைந்துள்ளது. "அப்பொழுது" (அதாவது கெத்சமனித் தோட்டத்தில்) "அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங் கினார்". அவர், "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண் டுள்ளது" என்று சீடருக்குக் கூறிய பின், "என் தந்தையே, முடிந்தால் இந்தத் துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும்" என்று தான் வேண்டினார். (மத் 26: 38 -39)

அவருடைய மனிதம் அங்கு மேலோங்கியதை அவர் ஏற்றுக் கொண் டார். சித்திரவதையையும் சாவையும் அவர் விரும்பவில்லை என்பது தெளிவு. ஆனால், இது ஒரு பாரிய இறைத்திட்டமென்பதால் அதை அவர் தழுவினார். அதனாலேயே, "ஆனா லும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே நிகழட்டும்" என்று செபித்து முடித்தார்.

எனது நீண்டகாலச் சிந்தனை யில், இயேசுவின் கெத்சமனித் தோட்டத்து அனுபவத்துக்கு நான் ஒரு முக்கியத்துவம் கொடுக்கின்றேன். ஆழ்மௌனத் தியானம்தான் உயர்ந்த செபம் என்று இன்று நான் உறுதியாகக் கூறினாலும், வாய்ச் செபம் செபிப்பதா னால் இயேசு செபித்த முறையையே நான் உள்வாங்குகின்றேன். முக்கியமாக இறைத்திட்டம் எதுவோ, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது தான் உண்மையான வாய்ச்செபம். *பாவத்தின் விளைவுதான் சாவல்ல.* சாவு வளர்ச்சியின் நிறைவு. வளர்ச்சி நிற்கும் பொழுது சாவு ஏற்படு கின்றது. சாவு யதார்த்தமானது.

### உயிர்ப்பு

உயிர்ப்பு விழா சாவை மறுப்ப தல்ல. உயிர்ப்பு விழா சிலுவையின் சாவை யதார்த்தமற்றதாக்குவதல்ல. "பகலாய் இருக்கும்வரை என்னை அனுப்பியவ ரின் செயலை நாம் செய்யவேண்டி இருக்கின்றது. இரவு வருகிறது: அப்பொழுது யாரும் செயலாற்ற இயலாது" (யோவான் 6:4) உண்மை.



எல்லோரு டைய வாழ்க்கை யிலும் இர வொன்று வரும். இதுவும் உண்மை. இது ஒரு யதார்த்தம்.

என்னுள் கடவுள் வாழ்கி றார். என்னுள் அன்பு வாழ்கின்றது. என்னுள் சக்தி ஒன்று உண்டு. இது, சாகாது. என்னுள் முழுமை (whole) ஒன்று உண்டு. கடவுள் முழுமையான வர். முழுமையானது கடவுள். இந்த முழுமை சாவில் அழிவதில்லை. இந்த முழுமை, முழுமையான கடவுளில் வாழ்கிறது. சாவுடன் இந்த முழுமை சாவதில்லை. இந்த சக்தி சாவதில்லை. இந்த அன்பு சாவதில்லை. இந்தத் தெய்வீகம் சாவதில்லை. பிரபஞ்சம் உள்ளிருந்து பிரசவித்துக் கொண்டே இருக்கும் (O Cosmic Birther).

### நிரந்தர மௌனம்

அண்மைக் காலமாக நான் மௌனத்தில் வாழ ஆரம்பித்தேன். மௌனத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித் தேன். மௌனத்தைப் பற்றிப் படித்தேன். மௌனத்தைப் பற்றி அனுபவ ரீதியாக ஞானிகள் எழுதியதைப் படித்தேன். ஒரு நாள் என் சிந்தனையில் ஓர் உள்ளு ணர்வு தோன்றியது. ஆழ் மௌனத்தில் ஈடுபட்டு வளரும் பயணத்தில், ஒரு நாள் நித்தியமான மௌனத்தினுள் நான் பயணிப்பேன். I will enter into Eternal Silence. இதையே சாவென்பர். இந்த உள்ளுணர்வு ஓர் அமைதியை என்னுள் உருவாக்கியது. கடவுளின் மொழி மௌன என்றார் றூமி என்ற இஸ்லாமிய கவிஞர். றூமி ஓர் ஞானி.

என்னை வெறுமையாக்கிப் பயணிப்பது தான் ஆன்மீகம். இது, இயேசுவின் சீடத்துவம். இந்த வெறுமை யாக்கலின் எல்லையில்தான் சாவு; ஆனால், அந்த வெறுமையின் எல்லை யில்தான் முழுமை - உயிர்ப்பு, வாழ்வு. வெறுமையின் எல்லைக்கும், முழுமை யின் துவக்கத்துக்குமிடையே ஒரு மென் மையான, மெல்லியதான ஒரு கோடுதான் உண்டு. இது, எனது இன்றைய சிந்தனை. ஆயினும், அதில் ஓர் உறுதி உண்டு.

### ஆயத்தமா?

சாவுக்கு ஆயத்தம் செய்யலாமா? செய்யலாம். மட்டுமல்ல; செய்ய வேண் டும். எங்ஙனம்? நல்ல சாவுக்கு செபம் சொல்வது மட்டுமல்ல, செயலில் ஓர் ஆயத்தம். ஒரு தெளி- வான ஆயத்தம்.என்னை நித்தமும் வெறுமையாக்கி வாழ்தல், Let go. பிடிப்புக்கள், ஆசை கள், உறவுகள் அனைத்தையும் ஒன்றின்பின் ஒன் றாக விட்டுவிடுதல். பதவிகள், அதிகா ரம், ஆணவம் தன்நோக்கிய வாழ்வு, மற்றவர்களை ஆட்சி செய்து வாழ்வது, என்று அனைத்தையும் விட்டுவிடுதல். அவ்வகையான வெறுமையில், ஒரு சாவில் முழுமை உண்டு, வாழ்வுண்டு.

ஆழ்மௌனத்தில் வாழ்ந்து, அந்த ஆழ்மௌனத்தில் பயணிக்கும் பொழுது, ஒரு நாள் (அந்த நாள் எனக்குத் தெரியாது. தெரிய வேண்டுமென்ற விருப்பமும் நல்லதல்ல) - நான் அந்த நிரந்தர மௌனத்தினுள் பிரவேசிப்பேன்.

**வாழ்வைத் தெரிவு செய்.**

**கரைவையூர்ச் செல்வம்**

# மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தவர்

**இராயப்பு யோசப் ஆண்டகை**

தீவகத்தின் ஆழியிலே விளைந்த நல்முத்தான சற்குருவே! நல் ஆயனே! நீவீர் செய்த நற்பணிகளையும், வீரதீரச் செயல்களையும் உலகறியச் செய்வது எம் கடனே.

ஆயனே! நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தது. ஆனா லும் ஓராயிரம் உள்ளங்கள் உங்கள் பணிகளை நினைத்து வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்கிலே 1971 ம் ஆண்டு அருட்பணியாளரின் கால்தடம் பதிக்கப்பட்டது. அவர் வரும்போது பெரும்பாலும் எல்லா வீடுகளும் குடிசை வீடுகளாக இருந்தன. மக்கள் வறுமையி லும் வழமையாக வாழ்ந்தார்கள்.

கள்ளமில்லா உள்ளம் கொண்ட வரின் புன்சிரிப்பும் எமது மக்களின் மன மும் ஒருங்கே சங்கமித்தன. இம்மக்களை இறை விசுவாசத்தில் வளர்க்க வேண்டு மென்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். மக்களின் பொருளாதாரக் கஷ்டங்கள் மத்தியிலும் இவ்வாலயம் உயர வேண் டும், அப்போதான் குடிமக்களும் உயர் வடைவார்கள் என்ற தீர்க்கமான முடிவை எடுத்துக் கொண்டார் தந்தையவர்.

அவரின் விருப்பத்திற்கேற்ப மக்கள் நல்மனதோடு தோட்ட விளைச் சலின் ஒரு பகுதியையும், நாளாந்த உணவிற்காகக் கொடுக்கப்படும் பங் கீட்டின் ஒரு பகுதியையும் கொடுத்து வந்தார்கள். சிறு துளி பெரு வெள்ள மாகியது. ஆலயக் கட்டுமானப் பணிகள் வெற்றிகரமாக நடைபெற்றது.

1974 ஆம் ஆண்டு மருதமடு அன்னை ஒவ்வொரு மறைமாவட்டப் பங்கு ஆலயங்களுக்கும் வருகை தந் திருந்தார். அப்போது ஆலயத்தின் முகப்பு வேலைகள் இரவு பகல் பாராது அவசரமாகத் திருத்தி அமைக்கப்பட்டது. வைகாசி மாதம் 24ம் திகதி மரியன்னை வந்திருந்தார். அவரது ஆசீரும், அருளும், பரிந்துரையும் எமது பங்கிற்கு நிறைவாகக் கிடைக்கப் பெற்றது.



ஆண்டகை அவர்கள் எமது ஊரில் பிரிந்திருந்த குடும்பங்களை ஒன்று சேர்ப்பதில் மிகுந்த ஆர்வமுள்ள வராக இருந்து சில குடும்பங்களை இணைத்து வைத்துள்ளார். மக்களின் சில தேவைகளை இனங்கண்டு உடனடி யாகத் தீர்த்து வைத்தார்.

இருபத்தைந்து வருடங்கள் குருவாகப் பணிபுரிந்தவர், இறைவன் திருவுளத்தால் ஆயராகப் பணியாற்றத் திருஅவையால் 1992 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டார். முதலில் மன்னார் மறைமாவட்ட ஆயரானார். அவரின் பணிக்காலம் ஒரு போர்க்காலமாக இருந்தது. பல சவால்கள் மத்தியிலும் ஆண்டகை அவர்கள் அயராது மக்களுக்காகப் பணியாற்றினார்.

உரும்பிராய்ப் பங்கு மக்களையும் புனித மிக்கேல் ஆலயத்தையும் மிகவும் நேசித்தார். ஆலயப் புனரமைப்புப் பணிகளில் மிகவும் நாட்டம் கொண்டவர்.

அன்பும், பண்பும், ஆளுமையும் கொண்ட நல் ஆயனின் 50 ஆண்டு பணி வாழ்வின் பயனாக இறைவன் புனித வியாழனன்று தம்மிடம் அழைத்துக்கொண்டார். எம் நெஞ்சைவிட்டகலா நினைவுகளோடு உமது ஆன்மா இறைவனில் இளைப்பாற கண்ணீர்ப் பூக்களோடு அஞ்சலி செய்கின்றோம்.

**திரு.எ.டொமினிக்**
**உரும்பிராய்**

# பாஸ்கா கொண்டாட்டம் - ஒரு நினைவுகூரல் நிகழ்வு

**முகவுரை:**

கிறிஸ்தவம் என்பது ஒரு சமயம் என்று கூறும் போது, அது இயேசுக் கிறிஸ்துவின் போதனையில் அடித்தள மிட்டுக் கட்டப்பட்டதோர் அமைப்பு. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவைத் தன் ஆண்டவர் என்று ஏற்று வாழுகிறான். கிறிஸ்தவம் இன்று பல்வேறு சபைகளாகப் பிரிந்து கிடப்பதும் யதார்த்தமே: கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்து மற்றும் பல சிறிய சிறிய குழுமங்கள் தம்மைப் பல்வேறு பெயர்களில் கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்துகின்றனர்.

எவ்வாறிருப்பினும் "கிறிஸ்தவம்" என்பது ஒரு வாழ்வியல் - ஒரு வாழ்க்கை முறை: அது ஒரு "பாஸ்கா"க் கொண்டாட்டம். ஒரு நிகழ்வு - ஒரு நினைவு கூரல் நிகழ்வு. இக்கட்டுரையானது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது: பழைய ஏற்பாட்டுப் பாஸ்கா நிகழ்வு: புதிய ஏற்பாட்டுப் பாஸ்கா நிகழ்வு: பாஸ்கா நிகழ்வின் எமக்கான செய்தி.

### 1. பழைய ஏற்பாட்டு 'பாஸ்கா' நிகழ்வு

பாஸ்கா என்னும் சொல்லானது எபிரேய மொழியின் 'Pasach' என்னும் சொல்லில் இருந்து வருகிறது. 'Pasach' என்பதன் பொருள் 'கடத்தல்' (Passover) அதாவது, ஆண்டவர் எகிப்தியரின் தலைப்பேறுகளைக் கொன்ற போது, இஸ்ராயேலர்களின் வீடுகளைக் கடந்து சென்றதைக் குறிக்கும்: 'உங்கள், பிள்ளைகள் உங்களைப் பார்த்து, இவ்வழிபாட்டின் கருத்து என்ன? என்று கேட்கும் போது, நீங்கள், 'இது ஆண்டவரின் பாஸ்காப்பலி: அவர் எகிப்தியரைச் சாகடித்த போது எகிப்திலுள்ள இஸ்ராயேல் மக்களின் வீடுகளைக் கடந்து சென்றார், இவ்வாறு நம் வீடுகளுக்கு மீட்பு அளித்தார் என்று கூறுங்கள்' (விடு. 12 : 26-27).

வேதாகமத்தின் படி இஸ்ராயேலர் நானூற்றி முப்பது ஆண்டுகள் எகிப்தில் வாழ்ந்தனர். நானூற்று முப்பதாம் ஆண்டு முடிவுற்ற அந்த இரவில் ஆண்டவர் விழித்திருந்து அவர்களை எகிப்திலிருந்து வெளியேற்றினார். இந்த இரவானது தலைமுறைதோறும் வருடா வருடம் இஸ்ராயேல் மக்களால் கொண்டாடப்படுவது வழக்கமாயுள்ளது. இது ஒரு நினைவு கூரல், அதாவது அடிமைத்தனச் சிறையாகிய எகிப்திலிருந்து இஸ்ராயேலர் வெளியேறிய நாளை தலைமுறையாக வருடாவருடம் நினைவு கூரும் ஒரு நிகழ்வு.

'பாஸ்கா' என்றால் 'கடத்தல்' என்று பொருள் கொண்டிருப்பினும் இது ஒரு நினைவு கூரல் நிகழ்வு என்பது நன்று. இந்நினைவுகூரல் விழாவின் தன்மையாதெனில்: குறிக்கப்பட்ட மக்களிற்குரியது! மேலும் இது ஒரு தனி மனித நிகழ்வாயல்லாமல் ஒரு குழு நிகழ்வாக அமைகின்றது. ஏனெனில் இது ஒரு குறித்த இனத்தின், ஒரு குழும அனுபவம். இந்த இரவில் ஆண்டவர் மக்களுக்காய் விழித்திருந்து போல அவர்களும் ஆண்டவருக்காய் விழித்திருக்க வேண்டும் என்பது வழமை. பாஸ்கா விழாவானது புளியாத அப்ப விழாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதைக் காணமுடியும். மேலும் இவ்விழாவானது ஒரு கழியாட்ட நிகழ்வு அல்ல, மாறாக ஆண்டவருடன் தொடர்பு கொண்டுள்ளதோர் ஆன்மீகக் கொண்டாட்டம் ஆகும் - இஸ்ராயேலர்களின் இறை பராமரிப்பு அனுபவக் கொண்டாட்டம் ஆகும். ஆண்டவரின் அருட்கரம் அன்று அவர்களுடன் இருந்து செயற்பட்டது: அடிமைத்தனத்திலிருந்து விடுதலையளித்துப் பாலைநிலத்தில் அவர்களை வழிநடத்தியது. இது ஒரு நன்றி உணர்வின் வெளிப்பாட்டு நிகழ்வு ஆகும். இந்நிகழ்வானது ஒரு சடங்காகவும் அமைகின்றது - பலியிடும் சடங்கு; மாசற்ற ஆட்டுக்குட்டி பலியிடப்படும் சடங்காகும். (வி.ப 12:3-9). இச் சடங்கானது மேலும் எல்லா நாட்களிலும் இடம் பெறும் சடங்கல்ல, மாறாகக் குறித்ததோர் நாளாகிய 'நிஷான்' மாதத்தின் 14ம் நாளில் இடம்பெறுகின்ற சிறப்புச் சடங்காகும்.

### 2. புதிய ஏற்பாட்டு 'பாஸ்கா' நிகழ்வு

பாஸ்கா ஒரு பலியிடும் நிகழ்வாகப் புதிய பாஸ்கா நிகழ்வானதுஇயேசுக் கிறிஸ்து என்னும் மாசற்ற செம்மறியின் பலி நிகழ்வுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. யூத மரபின் படி ஒவ்வொரு இஸ்ராயேல் தலைப்பேறும் ஆண்டவருக்கு அர்ப்பணமானது.

> **முப்பது வருடங்களுக்கு மேலான எங்கள் விடுதலைப் பயண அனுபவங்கள் யாவும் எமக்கு கடந்தவைகளாகவே மாறிவிட்டன. இது எங்களுக்கான ஒரு விருப்பமான மறதி. எம்மைப் பொறுத்தமட்டில் எம் திட்டமிட்ட மறதி என்றும் கூறலாம். எம் வாழ்வியல் யதார்த்தம் யாதெனில், ஒரு விரும்பாத அடிமைத்தனத்துக்குள்ளிருந்து நாம் விரும்பிய அடிமைத்தனங்களுக்குள் விலங்கிடப்பட்டுள்ளோம்**

இயேசுக் கிறிஸ்து நாசரேத்தூர் இயேசுவாக அவரது பெற்றோரின் தலைச்சன் பிள்ளையாகவும், இறை மகனாக அவர் தந்தையாம் இறைவனின் ஒரே மகனாகவும், ஆண்டவருக்கு அர்ப்பணமாய் உள்ளார். அவரது பாஸ்கா மறைபொருள் அவருடைய வாழ்வின் மூன்று பெரும் நிகழ்வுகளை உள்ளடக்கி நிற்கின்றது: பாடுகள், மரணம், உயிர்ப்பு - விண்ணேற்பு. இவை மானிட மீட்பின் பிரதான நிகழ்வுகளாகும். இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் நிகழ்வுகளுக்குள் ஆறு பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகின்றேன்: அவரது சீடர்களுடனான இறுதி இராவுணவு; யூதாஸ் கரியோத்தின் காட்டிக்கொடுப்பும் இயேசுக்கிறிஸ்துவின் கைதும்; யூத சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டு நடாத்தப்பட்ட விசாரணை; அவரது சிலுவை மரணம்; வெற்றுக் கல்லறைச் சாட்சியம்; சீடர்களின் உயிர்த்த கிறிஸ்து அனுபவமும் அவரது விண்ணேற்பும்.

புதிய பாஸ்கா நிகழ்வின் செய்தியானது இயேசு தம் பாடுகள் படுவதற்கு முதல் நாளில் தம் சீடருடன் உட்கொண்ட இறுதி இராவுணவின் போது சீடர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. புளியாத அப்ப விழாவின் முதல் நாளில் அவர் தம் சீடருடன் பாஸ்கா உணவை உண்பதற்கு முன் அப்பத்தை எடுத்து உடைத்து அதைத் தம் சீடருக்குக் கொடுத்து *'இது உங்களுக்கான என் உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள்' என்றும் பின்னர் கிண்ணத்தையும் எடுத்து 'இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்'* என்றும் கூறினார் (மத்.26:17-29; மாற்.14:12-25; லூக் 7-38; 1கொரி. 11:23-25).

புதிய பாஸ்காவும் ஓர் நினைவு கூரல் நிகழ்வே. எனவே ஒவ்வொரு கல்வாரிப் பலியும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் நினைவுகூரல் நிகழ்வுக் கொண்டாட்டமாகும். இது பழைய ஏற்பாட்டின் பாஸ்கா நிகழ்வு போலல்லாது, வெறுமனே நினைவு கூரலுடன் நின்று விடாது புதிய பாஸ்கா நிகழ்வுக் கொண்டாட்டத்தில் இயேசுக் கிறிஸ்து மீண்டும் மீண்டுமாகப் பலியிடப் படுகின்ற பலியிடல் நிகழ்வுக் கொண்டாட்டமாகும்: பலியிடுபவரும் பலிப்பீடமும் பலிப்பொருளும் அவரே. இந் நினைவுகூரல் நிகழ்வு இஸ்ராயேலரின் குழும நிகழ்வைப் போன்று உலகளாவிய திருஅவைக் கூட்டத்தினர் அனைவரையும் ஒன்றிணைத்து நிற்கும் நிகழ்வாகும். எனவே, இந்நிகழ்வானது சிதறுண்டு கிடக்கும் மக்களினத்தை ஒன்றிணைக்கும் அல்லது ஒன்றாகச் ச்சேர்க்கும் நினைவுகூரல் நிகழ்வு என்று கூறுதல் மிகையாகாது.

### 3. பாஸ்கா நிகழ்வின் எமக்கான செய்தி

ஒட்டுமொத்தத்தில் பாஸ்கா நிகழ்வுக் கொண்டாட்டமானது ஒரு நினைவு கூரல் நிகழ்வு (Recalling the Past) என்பது முறையானது. எனவே, தனிமனித



வாழ்விலும் சரி, ஒரு குழும வாழ்விலும் சரி நாம் நடந்து வந்த பாதையைத் திருப்பிப் பார்த்தல் மிகவும் அவசியம் என்பதை ஒவ்வொரு பாஸ்கா நிகழ்வுக் கொண்டாட்டமும் எமக்கு வலியுறுத்தி நிற்கின்றது. அன்றைய பாஸ்காக் கொண்டாட்டம் இஸ்ராயேலரின் வாழ்வில் மீண்டும் மீண்டுமாக, வருடா வருடமாக, தலைமுறை தலை முறையாகத் தம் மூதாதையர் நடந்து வந்த கடினமான பாதையை இரை மீட்டிப் பார்க்க வைக்கும் ஓர் அரிய நிகழ்வாகும்.

இந்நிகழ்வானது தம் விடுதலைப் பயணத்தில் அவர்கள் அனுபவித்த துயரங்கள் அனைத்தையும், துயரங்களோடு கூட ஆண்டவரின் உடன் இருப்பின் வெளிப்பாடுகளையும் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி நிற்கின்றது.

எகிப்திய அடிமைத்தனம், அதனால் எகிப்தில் அவர்கள் பட்ட துயரங்கள், எகிப்தை விட்டு வெளியேறி மீண்டும் விடுதலைப் பயணத்தில் நாற்பது ஆண்டு கால பாலைநிலத் துயரங்கள் - நோய்கள், அந்நியரின் படையெடுப்புகள், உறவுகளின் இழப்புக்கள், பசி, தாகம் இவ்வாறு பல துயரங்களை இந்நிகழ்வு அவர்களுக்கு நினைவூட்டுகின்றது. இவற்றோடு கூட ஒன்றுபட்ட குழும வாழ்வு நிகழ்வுகள், அதிசயங்கள், அற்புதங்கள், அதனால் பல குணப்படுத்தல்கள் என ஒட்டுமொத்த இறை பராமரிப்பு அனுபவங்கள் என்ற பசுமையான நினைவுகளையும் இந்நிகழ்வு அவர்களுக்கு நினைவூட்டுகின்றது. அதுமட்டுமல்லாமல் இந்நினைவு கூரல் நிகழ்வானது அவர்களை தாம் ஓர் 'இனம்' என்னும் அடையாளத்தைக் கொடுத்து 'ஓரினம்' என்னும் உணர்வினையும் ஊட்டி நின்றது, நிற்கின்றது. இவ்வுணர்வு சிதறுண்டு கிடந்த இனத்தினை மீண்டும் ஒன்றுகூட்டி இஸ்ராயேல் என்னும் தேசத்தினை உருவாக்கும் அளவுக்கு தூண்டுதலாக அமைந்தது. இவ்வாறே புதிய பாஸ்காவும் இயேசுக்கிறிஸ்துவின் இரத்ததினால் ஓர் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி எம்மில் ஒரு கிறிஸ்தவ அடையாளத்தையும் எம்முன் ஒரு குழும உணர்வையும் உண்டுபண்ணி இருக்கின்றது.

எம், விசேடமாக தமிழர்கள் எம்வாழ்வில் நடந்தது என்ன? நடப்பதும் தான் என்ன? நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க நாம் எண்ணவுமில்லை, விரும்பவுமில்லை. நாம் நடந்து வந்த பாதையில் நடந்தவை எல்லாம் எம்மைப் பொறுத்தமட்டில் வெறும் "கடந்தவைகளே" - இதுவே எங்கள் சிந்தனை: இதுவே எங்களுக்கான பாஸ்கா. அதாவது கடத்தல். முப்பது வருடங்களுக்கு மேலான எங்கள் விடுதலைப் பயண அனுபவங்கள் யாவும் எமக்குக் கடந்தவைகளாகவே மாறிவிட்டன. இது எங்களுக்கான ஒரு விருப்பமான மறதி. எம்மைப் பொறுத்தமட்டில் எம் திட்டமிட்ட மறதி என்றும் கூறலாம். எம் வாழ்வியல் யதார்த்தம் யாதெனில், ஒரு விரும்பாத அடிமைத்தனத்துக்குள்ளிருந்து நாம் விரும்பிய அடிமைத்தனங்களுக்குள் விலங்கிடப்பட்டுள்ளோம் என்பதே.

ஒரு கணம் தரித்து நின்று, தனித்து நின்று ஒரு 'நினைவுகூரல்' செய்வோமானால், நாங்கள் நடந்து வந்த பாதைகளில் பல பாஸ்கா இரவுகளைப் பார்க்க முடியும்: அன்று இரவோடு இரவாக நாம் இடம் பெயர்ந்த இரவுகள் எல்லாம் எம் பாஸ்கா இரவுகளே; நாம் முகாம்கள் அமைத்து வாழ்ந்த



அருட்பணி T.ரவிராஜ்

> **மின்சார வெளிச்சத்துக்காகவும் எரிபொருள் பிரச்சினைக்காகவும் வீதிகளில் போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது 'என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே' என்று தான் செபிக்கத் தோன்றுகின்றது**

குட்டிப் பாலைநிலங்கள் எம் கண்களுக்குத் தெரியும்; அங்கே நாங்கள் உட்கொண்ட 'மன்னாக்களும்' 'காடைகளும்' எங்களுக்கு ஞாபகம் வரும்; எங்களைத் தாக்கிய குண்டுகளுடன் இணைந்து கொண்ட கொள்ளை நோய்களும் ஞாபகம் வரும்; செங்கடல் தாண்டிய அனுபவம் போன்ற கடினமான கடற்பய

**திரும்பும் இடமெல்லாம் போர்களையும், உயிரிழப்புகளையும், இடப்பெயர்வுகளையும், உடல் ஊனமுறு-வதையும், பசி பட்டினிகளையும் பெரும் துன்பியல் நிகழ்வுகளாக கண்ணாரக் காண்கிறோம். இவற்றை எல்லாம் வெறும் காட்சிகளாகப் பார்த்துக்கொண்டு தவக்கால உண்டியலின் காணிக்கை யோடு நழுவிவிடப்போகிறோமா? "சின்னஞ்சிறிய சகோரர்களுள் ஒருவருக்குச் செய்யும்போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இறை வார்த்தையின்படி யார் அந்தச் சின்னஞ் சிறிய சகோதரன் என்பதை எப்போதாவது இரை மீட்டிப் பார்த்திருக்கிறோமா?**

# உயிரூட்டி ஒளியேற்ற...




**இ**ன்றைய உலகின் எந்தத் திசையை நோக்கினாலும் மரணப் பள்ளத்தாக்குகளே மலிந்து காணப்படுகின்றன. சமூக - பொருளாதார - அரசியல் மட்டுமன்றி, போர்கள், மக்களினம் திசை தெரியாமல் நாட்டுக்கு நாடு தப்பி ஓடுதல், கைதுகள், காணாமல் போதல் போன்ற துன்பியல்களும் மனித அவலங்களும் நிறைந்து காணப்படுகின்றன. இருள் சூழ் துன்பியல் பள்ளத்தாக்குகளிலிருந்து அவற்றுள் வாழ்வோரை விடுவிக்க, உயிரூட்டி ஒளியூட்ட, நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டியது என்ன? குரல் வளைகள் நெரிக்கப் பட்டிருக்கும் நீதியின் குரலை வெளிக் கொணர நம்முன் உள்ள பொறுப்பு என்ன? விடுதலையையும் உயிர்ப்பின் ஒளியையும் மிளிரவைக்க நம்மிடம் உள்ள வழிகள், செயல்கள் எவை என்று நானும் நீங்களும் சிந்திக்க வேண்டிய முக்கியமான நேரம் இது.

யாக்கோப்பு 1:27 சொல்கிறது "தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும், கைம்பெண்களையும் கவனித்தலும் உலகத்தால் கறை படாதபடி நம்மைக் காத்துக்கொள்வதும் ஆகும்." ஆனால் இன்று அனாதைகள் கைம்பெண்கள் என்றில்லாமல், மனித குலம் முழுவதுமே ஏதோ ஒரு வகையில் நம்மால் உயிரூட்டி, ஒளியூட்டி புதுவாழ்வு கொடுக்கப்படவேண்டிய நிலையில், எல்லா வழிகளிலும் ஏதோ ஒரு அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது என்பதை யாருமே மறுக்கமுடியாது.

எனவே. அனைத்துக்கும் முகம் கொடுக்கவேண்டிய, உதவவேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு தனி மனிதன் முன்னும் இறைவனால் வைக்கப்பட்டுள்ளது. இறைமகன் இயேசு மனுவுரு எடுத்ததன் முக்கிய நோக்கமே துன்புறுவோர், சுமை சுமந்து சோர்ந்திருப்போர், சிறைப்பட்டோர், அடக்கப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர் போன்ற காரிருளில் வாழும் மக்கள் பேரொளியைக் காணவேண்டும் என்பதே. அந்தப் பணியையே ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டும் என்று, அயலவனை அன்பு செய்யக் கட்டளை யிட்டு, நம் ஒவ்வொருவரையும் நல்ல சமாரித்தனாக மாற அழைக்கிறார்.

ஒரு துன்புறும் மனிதனுக்கு நாம் காட்டும் அன்பு என்பது, அவனது பசிக்கு ஒருவேளை உணவு அளிப்பதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. மாறாக, அவனது கண்களிலிருந்து துன்பக் கண்ணீர் வராதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று திரும்பும் இடமெல்லாம் போர்களையும், உயிரிழப்புகளையும், இடப்பெயர்வுகளையும், உடல் ஊனமுறு வதையும், பசி பட்டினிகளையும் பெரும் துன்பியல் நிகழ்வுகளாகக் கண்ணாரக் காண்கிறோம். இவற்றை எல்லாம் வெறும் காட்சிகளாகப் பார்த்துக் கொண்டு தவக்கால உண்டியலின் காணிக்கையோடு நழுவிவிடப்போகிறோமா? "சின்னஞ்சிறிய சகோதரர்களுள் ஒருவருக்குச் செய்யும்போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இறை வார்த்தையின்படி யார் அந்தச் சின்னஞ் சிறிய சகோதரன் என்பதை எப்போதாவது இரை மீட்டிப் பார்த்திருக்கிறோமா?

இவ்வாறு, துன்புறும் மக்கள் நடுவே நாம் செய்யும் பணியானது, தீர்ப்பு நாளில் நமக்கு எதிராக எழாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லை என்றால், இறைவன் நம்மைப் பார்த்து மத். 25:42-44 கூறுவதுபோல "நான் பசியிலும் தாகத்திலும் அன்னியனாகவும் ஆடையின்றியும் சிறையிலும் நோயிலும் இருந்தேன். ஆனால், நீங்கள் என்னைக் கண்டுகொள்ளவும் இல்லை. உதவவும் இல்லை" என்பார். அதற்கு நாம் "ஆண்டவரே! எப்போது நீர் இப்படியெல்லாம் இருந்தீரென" கேட்கமுடியாது. ஏனெனில் உன் அயலானில் இத்துன்ப இருளை நீங்கள் கண்டு கைதூக்க வேண்டுமென்று இயேசு ஏற்கனவே கூறியுள்ளார்.

இன்று துன்புறுவோர் சமூக, அரசியல், போர்வெறி, அதிகாரவெறி, பழிவாங்கல் போன்றவற்றால் பெரும் பாலும் வேண்டுமென்றே செயற்கையாக உருவாக்கப்படுகிறார்கள். இன்று றூஷிய - உக்ரேன் போரில் நடப்பதென்ன? இரக்கமற்ற போரின் தாக்கத்தினால் போலந்துக்கு மட்டும் லட்சக் கணக்கான அகதிகள், அனாதைகள் ஒடிக்கொண்டிருக்கிறார்கள். இவர் களைப்பற்றி ஒரு போலந்துக் குருவானவர் தெரிவிக்கையில் இவ்வளவு தொகையினரை எங்கே தங்கவைப்பது என்று தெரியாவிட்டாலும் அந்தந்த இடத்திலேயே திருத்தந்தை கூறியபடி மதபேதம் பாராமல் இயன்ற உதவிகளைச் செய்கிறோம். இயலாதவர்களுக்கு பங்குப் பணித்தளங்களில் இடமளிக்கிறோம். இது நமது மனிதக் கடமை என்கிறார். இந்த ஒருவருக்கு எழும் துன் புறுவோருக்கு உதவும் பண்பு மற்றவர்களுக்கு - நமக்கு ஏன் வரக்கூடாது? இயேசுவின் சிலுவைப் பயணத்தின்போது அவரது துன்பியல் நிலை கண்டு படைகளின் தடைகளை உடைத்து, உட்சென்று, அவரது திரு முகத்தைத் துடைத்து வலுவூட்டிய வெரோணிக்காவின் துணிவு நமக்கு ஏன் வராது?

சொகுசாக வாழ்ந்து பழகி, சுயநலத்துள் வாழ்ந்து, அடுத்தவனைச் சுரண்டி, வீழ்த்தி வாழப் பழகிவிட்டோம். இன்று நமது நாட்டின் பொருளாதார நிலையில் பஞ்சம், பசி, பட்டினியால் வாடும் மக்களைக் கொள்ளை விலைகளாலும் பொருட் பதுக்கலினாலும், வாட்டி வதைக்கும் வணிகர் சமூகத்தின் மனித நேயமும் இறை அச்சமும் எங்கே? அரசியல் தலைவர்கள் முதல் ஆன்மீகத் தலைவர்கள், தொழில் அதிபர்கள்கூட இன்று துளியும் இரக்கமின்றி மனி தத்தைச் சீரழிப்பதைப் பார்க்கிறோம். பொதுவாக ஆன்மீகத் தலைவர்களின் தவறான செயற்பாடுகளால் கடவுள் நம்பிக்கையிலிருந்து தப்பி ஓடும் எண்ணற்றவர்களை நாம் காண்கிறோம். மேலும், மதமாற்றங்கள் என்னும் வகையில்கூட, இன்று எண்ணற்றோர் துன்புறுவதை உரியவர்கள் உணர்வார்களா?

துன்புறும் மக்களுக்குள் தம்மை அர்ப்பணித்த பலரை நமது காலத்திலேயே நாம் பார்த்திருக்கிறோம். துன்புறும் தனது கறுப்பு இன மக்களுக்குத் தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்த, 26 வருடங்கள் வெள்ளையர்களினால் சிறையிலிருந்த நெல்சன் மண்டேலாவை நினைத்துப் பாருங்கள். இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் வாழ்வின் ஒளியை இழந்து, வீதி ஓரங்களில் கிடந்த அனாதைகள், தொழுநோயாளர், கைவிடப்பட்ட குழந்தைகளை தனது கரங்களால் தாங்கி உயிர்ப்பின் ஒளியூட்டி புனிதையான அன்னை தெரேசாவை எண்ணிப்பாருங்கள்.

"கடவுளை வழிபடு
நீ அவருக்கு அருகில் செல்லலாம்
பிறருக்கு சேவை செய்
கடவுள் உனக்கு அருகில் வருவார்"

என்று கூறிய அவரது வார்த்தைகளையும் எண்ணிப்பாருங்கள். அடுத்த சில மாதங்களில் புதிதாகப் புனிதராகவுள்ள போலந்தைச் சேர்ந்த நாசிகளால் துன்புறுத்தி வதைக்கப்பட்ட மக்களிடையே புகுந்து, துணிவோடு பணியாற்றியமைக்காக, நாசிகளால் சித்திர வதைக்குள்ளாகிச் சிரச்சேதம் செய்யப்பட்ட 28 வயதான ஜோன் என்ற இளைஞரை எண்ணிப் பாருங்கள். நாம் எங்கே நிற்கிறோம்?

இவ்வாறான பணிகளில் ஈடுபட, துன்புறுவோருக்கு முகங்கொடுக்க, நாம் அஞ்சிப் பின்வாங்குகின்றோம். நமது சொத்துக்கள் போய்விடுமோ என்று பின்நிற்கிறோம். இன்று நாம் காணும் பாதிக்கப்பட்ட ஊனமுற்றவர்களைக்கூட ஒரு சில நிறுவனங்களே தாங்கி, உயிரூட்டி, வாழ்வின் ஒளியூட்டி, மாற்றுத் திறனாளிகளாக்கி, அவர்களை மன எழிச்சியுடன் வாழவைப்பதை நாம் பார்க்கிறோம். இலங்கையிலும் ஜெய்ப்பூர், வீகான் போன்ற சிறிய நிறுவனங்கள் இத்தகைய பெரும் பணிகளை ஆற்றி வருகின்றன. இவர்களுக்கு நாமும் ஏதாவது செய்யமுடியாதா? துன்புறுவோர் மட்டில் கரிசனை காட்ட இதுவே தகுந்த காலம். துன்பங்களின் பிடிகளுக்குள் வீழ்ந்து தவிக்கும் அயலவருக்கு, நம் சகோதர சகோதரிக்கு உயிரூட்டி, வாழ்வின் ஒளியூட்டி அரவணைத்து நடக்கும் புனித நாட்களாக, கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஒளியோடு சங்கமிக்கும் நாட்களாக தவக்காலத்தின் இந்த இறுதி நாட்களிலாவது இறந்துபோன மனிதத்தை உயிர்க்க வைத்து உணர்வோடு செயற்படுவோமா?

## தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. நே. யூட்நாஸ்

**108. ஏன் தூய ஆவியார் திருத்தூதர்கள் மேல் இறங்கி வந்தார்?**

திருத்தூதர்களை அவர்களுடைய நம்பிக்கையில் உறுதிப்படுத்தவும், அவர்களைப் புனிதப்படுத்தவும் திரு அவையை நிறுவுவதற்கு அவர்களைத் தயார்படுத்தவும் தூய ஆவியார் திருத்தூதர்கள் மேல் இறங்கி வந்தார்.

**நம்பிக்கை அறிக்கையின் ஒன்பதாம் பிரிவு**

**109.நம்பிக்கை அறிக்கையின் ஒன்பதாம் பிரிவு என்ன?**

தூய கத்தோலிக்க திரு அவையையும் புனிதர்களுடைய சமூக உறவையும் நம்புகிறேன்.

**110.கத்தோலிக்க திரு அவை என்பதன் பொருள் என்ன?**

ஒரே தலைமைத்துவத்தின் கீழுள்ள நம்பிக்கையாளர்களின் கூட்டுறவே கத்தோலிக்க திருஅவை என அழைக்கப்படுகிறது.

**111.கத்தோலிக்க திரு அவையின் தலைவர் யார்?**

நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவே கத்தோலிக்க திரு அவையின் தலைவர் ஆவார்.

**112.இவ்வுலகில் திரு அவைக்குக் கண்ணால் காணக்கூடிய தலைவர் ஒருவர் இருக்கின்றாரா?**

ஆம் திரு அவைக்குக் கண்ணால் காணக்கூடிய தலைவராகக் கிறிஸ்துவின் பதிலாளாக உரோமை மறை மாவட்டத்தின் ஆயர் விளங்குகின்றார்.

**113.உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?**

உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் திருத்தந்தை என அழைக்கப்படுகின்றார். திருத்தந்தை என்னும் பதம் தந்தைக்குரிய தன்மையைக் குறித்துக் காட்டுகின்றது.

**114.ஏன் உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் திரு அவையின் தலைவராகக் கருதப்படுகிறார்?**

உரோமை மறைமாவட்டத்தின் ஆயர் திரு அவையின் தலைவராகக் கருதப்படுகிறார். ஏனெனில் கிறிஸ்துவால் திருஅவையின் தலைவராகப் புனித பேதுரு நியமிக்கப்பட்டார். ஆகவே அவருடைய வழிமரபினராக இருப்பதால் ஆகும்.

**115.புனித பேதுரு திரு அவையின் தலைவராக நியமிக் கப்பட்டார் என்பதனை எவ்வாறு அறிந்து கொள்ள லாம்?**

புனித பேதுரு திருஅவையின் தலைவராக நியமிக் கப்பட்டார்.


ஏனென்றால் இயேசு புனித பேதுருவைப் பார்த்து "எனவே நான் உனக்குக் கூறுகிறேன்: உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருஅவையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன்" (மத்தேயு 16:18,19).


**116. அனைத்துலகக் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தந்தையாகத் திருத்தந்தை விளங்குகின்றாரா?**

ஆம், திருத்தந்தை அனைத்துலகக் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தந்தையாக விளங்குகின்றார்.

(தொடரும்...)

# மானுடம் உயிர்ப்பது எப்போது?





அருட்பணி ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

உயிர்ப்பு ஒரு புதிய அவதாரம்: ஒரு புதுப்பிறப்படைந்த வாழ்வு என்று சொன்னால் மிகையாகாது. இயேசுவின் உயிர்ப்பு சொல்லும் செய்தியும் இதுவாகும். உயிர்ப்பு என்பது நம் கிறிஸ்தவர்களின் அடிப்படையான மறு வாழ்வுக் கோட்பாடு மட்டுமல்ல: மாறாக தினம்தோறும் வாழும் அனுபவம் என்பதை மறுப்பதற்கில்லை. இதைக் கோட்பாடாக, நம்பிக்கையாக மட்டும் வரையறுத்து வாழமுடியாது. கிறிஸ்தவர்களுக்கு மானுடத்தின் ஆணி வேரே உயிர்ப்பாகும். நம்பிக்கைக் கோட்பாட்டிற்கு அப்பால் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

**சமகாலத்தில் உயிர்ப்புப் பற்றிய பார்வை**

சமகால நிகழ்வுகள் அழிவையும், மடிவையும் பறைசாற்றிச் செல்கின்றன. ஆயுதப் போரும், உயிரியல் போரும் சாவையே, மரணத்தையே நினைவுபடுத்துகின்றது. சாவை விட வாழ்வே வலியது என்பதை உணராமலே வாழ்கின்றோம். இயேசுவின் உயிர்ப்பு எப்போதுமே நம்பிக்கையைப் பறைசாற்றுகின்றது. கல்லறைக் கடைசி வார்த்தையாக மனித வாழ்வில் இருக்க முடியாது என்பதை உயிர்ப்பு உரத்துச் சொல்கின்றது.

உயிர்ப்பு என்பது ஒரு விடுதலை அனுபவம். இன்று உயிர்ப்புப் பெறவேண்டிய பகுதிகள் எமது வாழ்க்கையில் நிறையவே உண்டு. எம்மில் மடியவேண்டியவை, உதிர்க்க வேண்டியவை, கழிக்க வேண்டியவை ஒரு வலியான அனுபவமாகும். இதைக் கடக்காமல் உயிர்ப்பு ஒரு விடுதலை அனுபவமாக மாறமுடியாது. ஒரு கோழிக் குஞ்சு வெளியே வரவேண்டுமென்றால் முட்டையை உடைத்துக் கொண்டுதான் வரமுடியும். ஒரு புதிய பிறப்புக்கூட பிரசவ வேதனையைத் தாண்டித்தான் ஏற்படுகின்றது. கிறிஸ்தவ வாழ்வை வழிபாடுகளோடு மட்டும் வரையறுத்து வாழ்வதிலிருந்து உயிர்ப்புத் தேவை! உறவில்லாமல் பகைமைகளோடு வாழ்வதிலிருந்து உயிர்ப்புத் தேவை. கடவுளை அடுத்திருப்பவரில் கண்டு வாழாமல் பாரா முகத்தோடு வாழ்வதிலிருந்து விடுதலை வேண்டும். இன்றைய பொருளாதார சமூகத்தீமைகள், சமூக வலைத்தளங்களின் ஆக்கிரமிப்புகளிலிருந்து விடுதலை பெறும்போதே உயிர்ப்பு அனுபவமாகின்றது. அடிப்படைத் தேவைகளின்றி வாழும் மக்களோடு பகிர்ந்து வாழாமல் வாழும் வாழ்விலிருந்து விடுதலை வேண்டும். இப்படியே நாம் அடுக்கிக்கொண்டே போகலாம்.

**மானுடத்தின் ஊற்றுக்களுக்குத் திரும்புவதே உயிர்ப்பு**

இன்றைய உலகத்தில் வாழ்பவர்களைவிட உயிரோடு இருப்பவர்களே அதிகம். வாழ்வது வேறு, உயிரோடு இருப்பது வேறு என்பதில் ஒரு குழப்பமான நிலை! வாழ்வு சாவைவிட வலியது என்றால் வாழ்வதே மேலானது. வாழ்வு என்பது உறவுகளோடு தொடர்புபட்டது. உறவிலே, பகிர்விலே, மன்னிப்பிலே வாழ்வது தான் வாழ்க்கை! இவர்களுக்குத்தான் உயிர்ப்பின் மீதுள்ள நம்பிக்கை சாத்தியமானது. இன்று உயிரோடு இருப்பதென்றால் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து இருப்பைத் தக்க வைப்பதாகும். இதில் நாங்கள் எங்கு நிற்கின்றோம்? மானிடத்தின் ஊற்றாய் விளங்குவது கடவுள் எம்மைப் படைத்த நிலைக்குத் திரும்பிச் செல்வதாகும். இது அடிப்படையில் கடவுளோடு, அடுத்திருப்பவரோடு, இயற்கையோடு கொள்ளும் உறவாகும். இறைவனோடும், சகோதரரோடும், இயற்கையோடும் ஒன்றித்து வாழும் வாழ்க்கையாகும். இதுவே உயிர்ப்பாகும். இந்த நிலைதான் எமது தொடக்க நிலையாகும். இன்றைய வாழ்வு எப்படி இருக்கின்றது? இன்றுமானிடம்பலவீனப்பட்டுநிற்கின்றது.

உலகளாவிய மோதல்களும், பகைமைகளும், விளைவுகளும், நாகரீகமற்ற செயல்களும் மானிடத்தை அழித்துக் கொண்டிருக்கின்றன. இன்றும் எமது தேசத்திலும் இனப் பாகுபாடுகள், ஆக்கிரமிப்புக்கள், பொருளாதார நிலைகள், சமூகத் தீமைகளின் ஆதிக்கங்கள் மனித வாழ்வில் செல்வாக்குச் செலுத்துகின்றன.


இந்நிலையில்மானுடம்எப்போது உயிர்க்கப்போகின்றது? மதங்கள் இருந்தும் மனிதம் இல்லாத நிலையைக் காணுகின்றோம். உயிர்ப்பை வாழ்வில் நிஜமாக்க மானுடத்தின் ஆணிவேர்களை அறுக்கும் நவீனத்துவ அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து வாழ்வை மாற்றுவோம்! சாம்பலுக்குள் மூடிக்கிடக்கும் நெருப்பைப் போல மானுடத்தின் பண்புகளுக்குத் தீமூட்டி வளர்ப்போம். இதுவே இன்றைய சவாலாகும். இதுவே உயிர்ப்பு என்பதை உணர்ந்து வாழுவோம்.

## தேடலில் தெளிவு

யாரும் எதுக்குமே ஆசைப்படக்கூடாது என்ற பேராசை புத்தருக்கு. "ஆசையே துன்பத்திற்குக்காரணம்" - "இறைவனுக்காக மட்டும் ஆசைப்படு" என்றார். சின்னச் சின்ன சிறகடிக்கும் ஆசைகள் தான் வண்ண வண்ணக் கனவுகளுக்கு வழிநடத்துகின்றன. ஆசைகளை ஆண்டவரிடம் அர்ப்பணித்து விடுவோம். அதற்கு ஆண்டவர் செயல்வடிவம்கொடுப்பார். அர்த்தமுள்ள ஆசைகள் ஆண்டவன் சந்நிதியில் ஆசிபெறும். ஆண்டவனைத் தேடுவோம், ஆலயத்தில் மட்டுமல்ல அண்ட சராசரத்தில் அயலவரில் தேடுவோம். தேடலில் தான் தெளிவு பிறக்கும்.

# உயிர்ப்பு விழாவின் உள்ளீட்டிற்கு ஈஸ்டர் பதம் பொருந்துமா!

## - ஓர் அலசல்



அருட்பணி அமிர்த யெயசேகரம்

**உயிர்ப்பு விழாவிற்கும் ஈஸ்டர் என்கிற ஆங்கிலப் பதத்திற்கும் தொடர்பில்லை.**

மேற்புல நாடுகள் சிறப்பாக ஆங்கில, ஜேர்மன், ஸ்கந்தநேவிய நாட்டவர்களும் ஒரு சில ஐரோப்பிய கிழக்கு நாடுகளிலும் இப்பதம் பயன்பாட்டில் உண்டு. குறிப்பாக ஜேர்மனிக்கும் என்ற குழுமம் குறிப்பாக வடபுல கடும் குளிர் பிரதேசத்தில் சூரியை ஒளியைக் காணாமல் வாழ்கிறவர்கள் அதைக்காணத் தாகித்து கொண்டிருப்பர். புராணக்கதையில் கிழக்குத் தேவதையின் (East) வருகையை எதிர்பார்த்திருப்பர். இலையற்ற மரங்கள் ஏப்ரல் மாத அளவில் துளிர்ப்பதை எதிர் கொள்வர். கிழக்கிலே சூரியன் உதிக்கிறதென்று எண்ணிக் கிழக்குத் தேவதைக்கு விழா எடுப்பர். ஐரோப்பா கிறிஸ்தவத்துக்கு மாறியதும் உயிர்ப்பு விழாவை ஈஸ்டர் (Easter) என்று அழைத்தார்கள். இலத்தீன் குடும்பம் வேதாகமப் பின்னனியில் பாஸ்கா பொருளுடன் உயிர்ப்பை அழைக்கிறார்கள். உயிர்ப்புத் திருவிழா ஏப்ரல் முழுமதியொட்டி இடம் பெறுகிறது.

யூதர்களுக்கு இது ஒரு விடுதலை விழா, தமிழர்களுக்குப் புத்தாண்டு விழா மேலும் இலத்தினில் ஏப்ரல் (Aprilis) என்ற சொற்பதம் திறத்தல் என்று பொருள்படும். அனைத்து மாதங்களுக்கு இம்மாதம் ஒரு நுழைவாயிலாக அமைகிறது.

உயிர்ப்பு ஞாயிறு குண்டு தாக்குதலில் கிறிஸ்தவ் அல்லாத வெகுசனத் தொடர்பு சாதனங்கள் உயிர்ப்பு ஞாயிறு என்று பயன்படுத்த கிறிஸ்தவ பத்திரிகைகள் ஈஸ்டர் ஞாயிறு பாவிப்பது வியப்பாக இருக்கிறது. மொழியாக்கம் செய்கையில் ஒரு சொல்லுக்கு நேரடியாகப் பொருள் கொள்ளக்கூடிய பதங்களைப் பயன்படுத்துவது சிறந்தது. அதற்கு மேலும் ஒரு விளக்கம் கொடுக்கூடியதாக இருக்கக் கூடாது.

உதாரணமாக: விருத்தசேதனம் என்ற சொல் நேரடியாக விளங்க முடியாது அதற்குப் பதிலாக நுனித்தோல் கத்தரித்தல் சிறப்பாக இருந்திருக்கும். அடுத்து வரும் வேதாகம மீள் பதிப்புகளில் இடம் பெறலாம்! குருத்தோலை ஞாயிறு என்று பயன்படுத்துகிறோம் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடியது. பாம் (Palm) ஞாயிறு என்று அழைக்கப்படுவதில்லை.

குண்டுத் தாக்குதலின்பின் இச்சொல் பிரபல்யமாகி விட்டது. பிறமறையினரும் விளங்கிக் கொள்ளும் சொல் இது. ஞாயிறுக்கும் உயிர்ப்புக்கும் பூரண தொடர்புண்டு. கதிரவன் உயிர் அனைத்துக்கும் நெம்புகோல். பிறமறையினர் உயிர்ப்பு என்ற சொல்லில் நிறை அர்த்தத்தைக் காணுவது நோக்கற்பாலது. பிற மறை உரையாடலுக்கும் மொழிவளப் பயன்பாடு முக்கியமானது. இவ் உயிரப்பு விழா பல்சமய, மொழி, பண்பாட்டு, பன்னாடுகளின் சங்கம விழாவாக அமைகிறது.

## கூட்டொருங்கியக்கமாக வாழ்வோம்

அரங்க நிகழ்வுகளின்
அரசியல் மாற்றங்கள்
இவ்வுலகில்
முட்டி மோதிக் கொண்டிருக்கிறது

அடுக்கடுக்காக
உயர்ந்து போகும்
விலைவாசி உயர்வும்
வறுமைக் கோட்டில்
வரம்புகளற்ற எம்
வாழ்வின் தாக்கத்தைத்
தோற்றுவிக்கின்றது.

நிலுவைகளாக இருந்தவற்றை
விற்றுப் பணத்தைப்
பின் வங்கிகளில்
நிலுவையாக்கும் எம்
பகிரப்படாத பண்பின்
சித்தாந்தத்தில்

இறைவன் எமக்குக்
கொடுக்கும் செய்தி
நாம் கூட்டொருங்கியக்கமாக
வாழ்வோம் என்பதுவேயாகும்

யோ.யோய் பேர்சி
சுன்னாகம்

## இளையோர் காவியம்

விழுந்த இடத்தில் கூட
இயேசுக்கு வெற்றி
நீ எழுந்து நடக்க
தோள் தரும் தோல்விகள் கூட

துயரம் - நீ வாழ்க்கையை
எட்டிப் பார்க்கிற உயரம்

உன் கண்ணீர் கூட
சேரவேண்டிய இடத்துக்கு வழி

இழப்பு
மிஞ்சியிருக்கும் வாழ்க்கைக்கு
எப்பவும் துணை

உன் சிதைவுகள்
வலிமைகளின் ஒன்றுகூடல்

ஏமாற்றம்
போலிகள் ஜெயிக்காமல்
மூடப்பட்ட பாதை

உன் தடுமாற்றம்
நிலை குலையாமல்
செய்யப்பட்ட வைத்தியம்

நீ நடுத்தெருவில் என்பது
வாழ்க்கை
தொடங்குவதற்கான ஆதாரம்

உன் பின்னடைவு
கைவிடமாட்டோம் என்ற சபதம்

எட்டப் பார்ப்பது போல
முட்டிமோதுகிறது உலகம்

வெட்ட வெட்டத் தழைப்பது
மட்டுமல்ல
வெட்ட விடாமலும் தடு

உன் முடிவு அவமானம்
அவமானப்பட்ட நாள்

நீ தட்டிக்கேட்பது கூட
மக்களுக்குச்
சுமக்கப்படுகிற சிலுவை

உயிரோவியன்

(தொடரும்...)

# பாடுகளை எதிர்கொண்ட நேர்மையாளர்

இயேசுவின் பாடுகளை நான்கு நற்செய்தியாளர்களும் தமது நற்செய்திகளில் குறிப்பிட்டாலும் ஒவ்வொருவரும் தமக்குரிய நோக்கிற்கு அமைவாக, கட்டம் கட்டமாக வர்ணிக்கின்றனர்.

ஒவ்வொரு நற்செய்தியாளரும் குறிப்பாக சில இறையியல் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கிக் கிறிஸ்துவின் பாடுகளை எழுதியுள்ளார்கள். புனித லூக்கா நற்செய்தியாளர் கிறிஸ்துவின் திருப்பாடுகளை எத்தகைய கண்ணோட்டத்தில் பார்க்கிறார் என்பதையும், அவர் வலியுறுத்தும் சிறப்பான செய்தியையும் இக்கட்டுரை வழியாகத் தியானிக்க அழைக்கிறேன்.

கிறிஸ்துவை முழு மனித விடுதலைக்காக உழைத்துத் தம் வாழ்வை பலியாக்கிய ஒரு இறைவாக்கினராகப் புனித லூக்கா சித்தரிக்கிறார். இயேசு தமது பணிக்களத்தில் கால் பதித்தபோது தாம் வளர்ந்த நாசரேத்து ஊரில் இறைவாக்கினர் எசாயாவின் வாக்கு (எசா 61:1-2) தம்மில் நிறைவேறியதாகக் கண்டார். ஆண்டவருடைய ஆவியால் அருட்பொழிவு செய்யப்பட்ட இயேசு ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்ய முன்வந்தார்.

இறைவாக்கினர் யாவரும் பாடுகள் பட்டனர், பலர் கொல்லப்பட்டனர் என்பது மனித வரலாறாகும். பாரத நாடு அரசியல் விடுதலை வாழ்வு பெறப் பாடுபட்ட மகாத்மா காந்தி கொல்லப்பட்டார். அமெரிக்காவில் கறுப்பர் என அடிமைகளாக்கப்பட்டோரின் விடுதலைக்காக போராடிய மாட்டின் லூதர் கிங் படுகொலை செய்யப்பட்டார். தென்னாபிரிக்காவில் புறம்தள்ளப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுத்த நெல்சன் மண்டேலா 28 ஆண்டுகள் கடூழியச் சிறையில் அடைக்கப்பட்டார்.

புனித லூக்கா நற்செய்தியாளர் கண்ட விடுதலை வீரர் இயேசு சுமந்த சிலுவைகள் ஏராளம். இயேசு பருகிய துன்பக் கிண்ணம் பற்றிய புனித லூக்காவின் சிந்தனைகள் வெறுமனே சிந்தனைக்குக் கருப்பொருளாக மட்டுமல்லாமல் அவை தியானத்தால் உள்வாங்கப்பட்டு எமது இரத்த நாளத்தில் கலந்து கொள்ளப்படவேண்டிய வாழ்வின் பாடங்களாகும்.

## ஆண்டவரின் திருவிருந்து


இயேசுதம் சீடரோடு உண்ட பாஸ்கா இராவுணவு அவரது பாடுகளின் ஒட்டுமொத்த நினைவு விருந்தாகும். பாவிகள், வரிதண்டுவோர், விபச்சாரிகள், ஒடுக்கப்பட்டவர்கள் போன்றவரோடு விருந்துண்டு உறவாடி அவர்களின்

**அருட்பணி. ஜீவா போல் அ.ம.தி.**

தோழமையில் தம்மை இணைத்துக் கொண்ட இயேசு இறுதியாகத் தமது பன்னிரு சீடரோடு பாஸ்கா உணவை உட்கொண்டார். அதில் பகிரப்பட்ட அப்பத்தையும், இரசத்தையும், தமது உடைக்கப்படும் உடலாகவும், சிந்தப்படும் இரத்தமாகவும் நினைவுகூர்ந்து தமது மரணத்தால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையை நிறுவுகின்றார். இது ஒரு தியாக வேள்வியாகும். எகிப்து நாட்டில் அடிமைகளாக இருந்த மக்கள் தமது விடுதலையைக் கொண்டாடிய பாஸ்கா உணவை இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தால் இறைவன் வழங்கும் புதிய விடுதலை வாழ்வின் விடியலாக நினைவுகூரப் பணிக்கிறார்.

## ஒலிவ மலையில் இயேசு

ஒலிவமலையில் இயேசுவின் இறைவேண்டல் செப வாழ்விற்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கும் லூக்காவின் பார்வையில் அதியுச்ச நிலை அடைகிறது. மரண வேதனையில் வியர்த்துக் களைத்து, கனத்த இதயத்துடன் இயேசு வேண்டுதல் செய்கிறார். வியாகுலம் நிறைந்த இயேசுவின் வியர்வை பெரும் இரத்தத் துளியைப் போலத்தரையில் விழுந்தது. பிள்ளைகள் கேட்பதைத் தவறாது கொடுக்கும் தந்தையிடம் இறைமகன் இயேசு உருக்கமாக மன்றாடினார். இத் துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும் என மனமுருகி மன்றாடினார். இது மனித ஆற்றலுக்கும் பலத்திற்கும் அப்பாற்பட்ட வேதனையை வெளிப்படுத்தியஒருமன்றாட்டு. தொடர்ந்தும் இயேசுஆனாலும் உம் விருப்பப்படியே நிகழட்டும் என்று மன்றாடினார். "ஆனால்" என்னும் சொல் இயேசுவின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்த இறைநம்பிக்கையின் வெளிப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. இன்றைய காலகட்டத்தில் துன்ப துயரங்களால் அலைக்கழிக்கப்படும் மனித குலத்திற்கு இயேசு கற்றுத் தரும் அழகான செபம் இதுவாகும். என் விருப்பம் அல்ல உம் விருப்பம் என்று கூறுவது எம்மை வல்லவராக்கும். இறைத் தந்தையின் கரங்களில் எம்மைக் கையளிக்கும்போது அது எம் உள்ளத்தில் ஆழ்ந்த அமைதியைப் பிறப்பிக்கிறது.



எதையும் தாங்கும் இதயத்தை எமக்குத் தருகிறது. சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள், என்று சோர்வுற்றுத் தூங்கிக் கொண்டிருந்த தம் சீடர்களுக்குக் கூறிய இயேசுவின் அறிவுரைவேதகலாபனையின் போதுதுன்பங்களைத் தாங்கிக் கொள்ள ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களுக்கு வலுவூட்டியது. அவர்கள் வீரத்துடன் துன்பங்களை எதிர்கொண்டார்கள், பல நூற்றுக் கணக்கானோர் மறைசாட்சியர் மரணத்தைத் தழுவினார்கள்.

இயேசுவும் சிலுவையை எதிர்கொண்டார், ஆவலாய் அதை தழுவினார், மலை உச்சிவரை சுமந்து சென்றார். இவ்வாறு இறைவாக்கினருக்குரிய பரிசைப் பெற்றுக்கொண்டார்.

## இயேசுவைக் காட்டிக்கொடுத்தல்

ஒருவருடைய பிரத்தியேக அல்லது தனிப்பட்ட சூழலுக்குள் நுளைய அன்பர்கள் நண்பர்களுக்கு மட்டும் அனுமதி உண்டு. இயேசு தம் பன்னிரு சீடர்களுக்கு மட்டும் அவ் அனுமதியைக் கொடுத்தார். அவர் எங்கு தங்குவார், எப்போது என்ன செய்வார் என்ற செய்தி பன்னிருவருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. அதனால் இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான யூதாசு இஸ்காரியோத்தை முப்பது வெள்ளிக்காசுக்குப் பகைவர்கள் வாங்கினார்கள். புனித லூக்கா தம் நற்செய்தியில் சாத்தான் யூதாசு இஸ்காரியோத்துக்குள் புகுந்தான் என்று கூறுகிறார். அதனால் இயேசுவின் பன்னிரு சீடர்களுள் ஒருவரான யூதாசு ஒரு துரோகியாக மாறினான். இயேசு அவனிடம் 'முத்தமிட்டா மனுமகனைக் காட்டிக்கொடுக்கப் போகிறாய்' என்று கூறும் பொழுது இயேசுவின் உள்ளத்தை ஊடுருவிய ஏமாற்றமும், வேதனையும் எம் உள்ளங்களையும் பாதிக்கின்றது.

## இயேசுவின் மரணத் தீர்ப்பு

புனித லூக்கா மூன்று நிலைகளில் இயேசுவின் மரணத் தீர்ப்பை மேடையேற்றுகிறார். தலைமைச் சங்கம் என்று மதம் சார்ந்த அதிகாரிகள் தாம் சுமத்திய குற்றங்களை நிரூபிக்க முடியாமல் அந்நியர் கையில் ஒப்படைக்கத் தீர்மானிக்கிறார்கள். சீசருக்கு எதிராக அரசியல் குழப்பம் வருவிக்கிறார் என்று பொய்க் குற்றம் சுமத்துகிறார்கள். ஆளுநர் பிலாத்து குற்றமேதும் கண்டுபிடிக்க முடியாமல் கும்பலுக்குப் பயந்து இயேசுவுக்குச் சிலுவைச் சாவை வழங்குகிறார். பதவி ஆசை கொண்ட ஏரோது இயேசுவை இகழ்ந்து ஏழனம் செய்து கழிப்புற்றான். சந்தர்ப்பங்களைத் தம் சுயநலத்திற்காகத் துஷ்பிரயோகம் செய்து குறுகிய கால சுகம் பெறநினைப்போர் பட்டியலில் இடம்பெற நினைத்த ஏரோது தன் பகைவராய் இருந்த பிலாத்துவுடன் மீண்டும் நட்பை ஏற்படுத்த அவரிடம் இயேசுவைக் கையளித்தான்.

## இயேசு சந்தித்த முரண்பாடுகளின் வேதனைகள்

- இராவுணவு வேளையில் தன் உடலையும் இரத்தத்தையும் உணவாகத் தியாகம் செய்து புதிய வாழ்வுக்கு அழைக்கும் போது அவரது சீடர்கள் தங்களுக்குள் யார் பெரியவர் என்று விவாதித்தார்கள். ஆனால் நீங்கள் அப்படிச் செய்யலாகாது எனக் கண்டித்தார்.
- கோதுமையைப் போல உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான், என இயேசு கூறியபோது பேதுரு சிறையிடப்படுவதற்கும், சாவதற்கும் தயார் என்றுஅடித்துக் கூறினார். ஆனாலும் மூன்று முறை தம் தலைவராகிய இயேசுவை மறுதலித்தார்.
- சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனை வேண்டுங்கள் என்றார் இயேசு. ஆனால் சீடர்களோ துயரத்தால் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

> **இயேசு சுமந்த சிலுவைகள் ஏராளம் இயேசு பருகிய துன்பக் கிண்ணம் பற்றிய புனித லூக்காவின் சிந்தனைகள் வெறுமனே சிந்தனைக்கு கருப்பொருளாக மட்டுமல்லாமல் அவை தியானத்தால் உள்வாங்கப்பட்டு எமது இரத்த நாளத்தில் கலந்து கொள்ளப்படவேண்டிய வாழ்வின் பாடங்களாகும்.**

இப்படிப்பட்ட முரண்பாடுகளும், புரிந்துகொள்ளாமையும், தனித்து விடப்பட்டமையும் இயேசுவின் மனதில் வேல் பாய்ந்ததுபோல அவரைத் துன்பத்தில் ஆழ்த்தியது. உள்ளத்தால் பட்ட வேதனை உடலில் அனுபவிக்கும் வேதனையைவிட ஆழமானது, வியாகுலம் நிறைந்தது.

## நேர்மையாளரின் வெற்றி

இயேசுவின் பாடுகளின் பொழுது பன்னிரு சீடர்கள் நடந்து கொண்ட விதம் இன்றைய சூழலில் அன்றாடம் இடம் பெறும் உறவுகளின் விரிசல்களாகும். காட்டிக்கொடுத்தல், வன்முறை, மறுதலித்தல், ஒழித்தப்புதல் போன்ற எதிர்மறையான செயல்கள் நாம் எதிர்கொள்ளும் சவால்களாகும்.

அன்று இயேசு இத்தகைய எதிர்மறை சூழலில் மன்னிப்பவராக, அகிம்சை வழி நிற்பவராகத் தனித்து நின்று எதிரிகளைச் சந்திக்கத் துணிந்தவராக விழங்கினார். எப்பொழுதுமே எல்லா சூழலிலும் களங்கமற்றவராகவும், நியாயம் கேட்பவராகவும் விளங்கினார். ஒரு கள்வனைப் பிடிக்க வருபவர் போல... என்று பெரும் ஆயுத பலத்தோடும், பயங்கரமான தந்திரங்களோடும் தம்மைக் கைது செய்ய வந்தவர்களிடம் நியாயம் கேட்கின்றார். இருளின் அதிகாரத்திற்குத் தம்மைக் கையளிக்கிறார்.

ஆதிகாரங்களில் இருப்போரும் அவர்கள் போடும் பிச்சைகளில் பிழைத்துக் கொள்ளும் மக்கள் கூட்டமும் களங்கமற்ற இயேசு மீது பழி சுமத்தினார்கள். பதவி மோகத்தில் அதிகாரங்களைத் தக்கவைக்க இயேசுவைச் சிலுவைச் சாவுக்குக் கையளித்தார்கள். ஆயினும் இயேசுவின் குற்றமற்ற, நேர்மையான ஆளுமை தலை நிமிர்ந்து நின்றது. தனது தந்தையின் சித்தத்திற்கு அடிபணிந்து அதர்மங்களைத் தார்மீகத்தால் வெல்லத் துணிவு கொண்டது.

அலகையின் பிடியில் சிக்குண்டவர்கள் தமது அதிகாரம் ஆணவத்தால் சிலகாலம் குளிர் காயலாம். ஆனால் இயேசுவோ அன்புக்கு அடிமை யானவர் சிலுவை வழி மீட்பின் வழி எனத் தேர்ந்து, சிலுவையில் தன் பகைவர்களையும் மன்னித்து நிரந்தர வெற்றி வாகை சூடினார். இதைக் கண்ட நூற்றுவர் தலைவர்

**“இவர் உண்மையாகவே நேர்மையாளர்” என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்** (லூக் 23:47).

# காவலன் கலசம்

# வெறுமையாக்கி நிறைவாதல்

**பா**லைவனத்து அனுபவம் வெறுமையிலிருந்து நிறைவடைதலையே சுட்டுகின்றது. வாழ்வியற் கலையில் நீந்துவதற்கு வெறுமையாக்கல் துணை புரிகின்றது. பாலை நிலத்தில் பயணிக்க முன்வருதல் எம்மைச் சில கணங்கள் விட்டுவிட்டு, சமாதி நிலையில் சஞ்சலமின்றி இருப்பதாகும். பாலைநிலத்தில் எம் எண்ணங்களைப் பசுமையாக்கி, அகவிடுதலையை நோக்கி நகருகிறோம். ஒன்றுமில்லாமையில் இருந்து பிறந்த நாம் மீண்டும் கருவாகி உருவான இடத்திற்கே திரும்புகிறோம். உள்ளன்போடு ஒன்றும் இல்லாமையை நேசிக்க ஆரம்பிக்கிறோம்.

**“எல்லாவற்றிலும் திருப்தி அடைய ஒன்றுமில்லாமையில் ஆசைப்படுங்கள். எல்லாவற்றையும் பெறுவதற்கு ஒன்று மில்லாமையைப் பெற ஆசைப்படுங்கள். எல்லாமாக இருப்பதை வந்தடைவதற்கு ஒன்றுமில்லாமலிருக்க ஆசைப்படுங்கள். எல்லாவற்றினதும் அறிவை வந்தடைய ஒன்றுமில்லாமையின் அறிவின்மீது ஆசை கொள்ளுங்கள்”**

என்று சிலுவை யோவான் தூண்டுகிறார்.

**“உண்மைச் சமுத்திரத்தின் அடியில் நீந்தவேண்டும் என்றால் நீங்கள் பூச்சிய நிலைக்கு உங்களைத் தாழ்த்துங்கள்”**

என்று மகாத்மா காந்தி மொழிகிறார்.

ஒருவர் தன்னை வெறுமையாக்கக் கற்றுக் கொள்ளும்பொழுது ஒன்று மில்லாமையை எதிர்கொள்கின்றார். ஒன்றுமில்லாமையின் அனுபவங்கள் அதிர்ச்சி மிக்கவையாகவும் ஆழமானவையாகவும் உள.

வாழ்வின் இரகசியம் தன்னலமற்ற பணியே யாகும். பற்றற்ற நிலையில் வாழுதலே எமது உயர் இலட்சியமாகும். துன்பத்தில் இன்பம் காணுதல் இயற்கையோடு, இறைவனோடு இணைந்து வாழுதலின் பயனாகும். 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7ஆம் திகதி நான் இதய அறுவைச் சிகிச்சை பெற்ற நாள். அது எனது வாழ்வின் உச்சமான துன்ப நிகழ்வு. அக் கணத்தில் நான் பேரின்பம் பெற்ற நினைவு. நான் ஆறுதல் அடைந்தேன், இயேசுவின் பெரும் பாடுகளில் சிறு பங்களிப்பு பெறும் வாய்ப்புக் கிடைத்தது என்பதாகும்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதற் திருமுகத்தில் சிலுவை வழி வரும் இன்பத்தைச் சிறப்பாகக் கூறுகிறார்:

“சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றிப் பறைசாற்றுகிறோம். அச்சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கிறது. ஆனால் அழைக்கப்பட்டவர்கள் யூதரானாலும் கிரேக்கரானாலும் அவர்களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் ஞானமுமாய் இருக்கிறார். ஏனெனில், மனித ஞானத்தை விட கடவுளின் மடமை ஞானமிக்கது. மனித வலிமையைவிட அவருடைய வலுவின்மை வலிமைமிக்கது” (1கொரிந்தியர் 1:23-25).

**“என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கை நெகிழ்ந்தீர்?”**

எனச் சிலுவையில் கடைசிக் கட்டத்தில் இயேசு ஏக்கத்தோடு கதறி அழுவது வெறுமையாக்கலின் உச்சக் கட்டமாகும்.

**“கிறிஸ்து இயேசு கொண்ட மன நிலையே உங்களிலும் இருக்கட்டும். கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி, அடிமையின் வடிவம் ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவிற்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்”**

(பிலிப்பியர் 2:5-8).



அருட்பணி வின்சன் பற்றிக் அ.ம.தி

**ஒன்றுமில்லாமையை அன்பு செய்யுங்கள்,**
**சுயத்திலிருந்து விடுபடுங்கள்,**
**தனித்து நில்லுங்கள்,**
**எவரிலும் தங்கியிராதீர்கள்,**
**அமைதியாய் இருங்கள்,**
**எல்லாக் கட்டுக்களிலிருந்தும் விடுதலையாகுங்கள்,**
**கட்டுப்பட்டோரை விடுவியுங்கள்,**
**துன்பநீரைப் பருகும்பொழுது**
**அன்புச் சுவாலையால் பற்றி எரிவீர்கள்,**
**பாலைவனத்தில் வாழும் முறை இதுவே**
**என்று வழிகாட்டுகிறார் மக்டேபேர்க்கின் மீசைல்ட்.**

இயேசு சிலுவை மரணத்தைத் தெரிந்துகொண்டு, விருப்பத்தோடு, துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டார். அவர் சாவை எதிர்கொள்ளத் தயங்க வில்லை. “தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவார். என் பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக் கொள்வார்”

(மாற்கு 8:35).

என்று இயேசு வித்தியாசமாசச் சிந்தித்து, வியப்புறும் வகையில் செயற்பட்டார். முழுமையாக வாழுதலுக்கு ஒரே ஒரு வழி அதை இழந்து விடலே என்பதை இயேசு புரிந்துகொண்டார். அந்த வகையில் அடிப்படையான சமூக மாற்றத்திற்கு வித்திட்டு விருட்சமானார்.

இயற்கை எழில் கொஞ்சும் மரங்கள் உள்ள சூழலில் அமைந்த பாடசாலையில், ஓர் ஆசிரியர் தம் மாணவர்களைப் பார்த்துக் கேட்டார்:

**“பிள்ளைகளே, எமது மதிய உணவு ரொட்டித் துண்டுகளை எப்படிச் சாப்பிடும்பொழுது அதிக சுவையாக இருக்கும்?”**
**“சேர், ஜாம் பூசிச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்”**
**“சேர், பட்டர் பூசிச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்”**
**“சேர், பகிர்ந்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும்”**

என்று ஒரு மாணவன் பதிலளித்தான். அந்த மாணவன்தான் அப்துல் கலாம்.

இயேசு மண்ணின் மாட்சிக்காக, மனுக் குலத்தின் மீட்சிக்காக, தனது உயிரை உள்ளன்போடு தாரைவார்த்துக் கொடுத்தார். அவரது தற்சார்பற்ற கையளித்தல் தரணிவாழ் மக்களுக்கு நிலைவாழ்வு நிகழ்வாகவே அமைந்தது. மறுமலர்ச்சிச் சமுதாயத்தின் திருப்புமுனையாகும்.

“Bring out the Magic in your Mind” எனும் நூலில், அல் கொரான் எழுதினார்:

**“நீங்கள் பணத்தைக் கொடுத்து அனுப்பும் பொழுது அதனை ஆசீர்வதிக்க மறவாதீர். அது சென்றடையும் அனைவரையும் ஆசீர்வதிக்கும்படி அதனைக் கேட்டுக் கொள்ளுங்கள்”.**

பசியோடு இருப்பவருக்கு உணவளித்தும் உடையில்லாதோருக்கு உடையளித்தும் செயற்படும்படி கட்டளையிடுங்கள்.

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

11

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 6



**6.3 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் ஏவுதல்களுக்குப் பாப்பரசர் பிரான்சிஸ் துணிச்சலான ஊக்குவிப்பு.**

இந்தச் சங்கம் முன்நடந்த சங்கங்க ளைப் போலப் பிழையான போதனைகளைக் கண்டிக்காவிட்டாலும், புதிய இறையியல் கொள்கைகளைப் பிரகடனம் செய்யாவிட்டாலும், அதாவது கிறிஸ்துவைப் பற்றி புதிய இறையியல் கோட்பாடுகள் படிப்பினைகளை வெளிப்படுத்தாவிட்டாலும், அது தன்னு டைய 16 ஏடுகளிலேயும் கொடுத்திருக்கும் ஆழமான சிந்தனைகளும் பார்வைகளும், வரும் காலத்திற்கு ஏற்றவாறு, புரட்சிகரமான சிந்தனை களாக அங்கே கொண்டுவரப் பட்டிருக்கின்றன. அவைகள் ஒரு புதிய காலத்தின் ஆரம்பத்தைத் தொடங்குவதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றன.

இச்சங்கத்தைக் கூட்டிய பாப்பரசர் 23ஆம் அருளப்பர் கொண்டிருந்த கனவிற்கு இணங்க, சங்கம் திருஅவைகளின் ஊற்றிற்குச் சென்று ( going to the origins of Christianity), இன்றைய திருஅவைகளைப் புதுப்பிக்கவும், இன்றைய உலகிற்கு பொருத்தமான முறையில் செயற்படவும் காட்டிய வழிமுறைகள், எமக்கு உறுதியையும் மனத்திடனையும் துணிவையும் கொடுத்திருக்கின்றன. இத் துணிவே பல சவால்கள் மத்தியிலும், திரு அவை தலைவர்களுடன் சங்க நோக்கத்திற்காக வாதாடுவதிலும் என்னை பெலப்படுத்தியது.

இற்றைவரையும் 19 நூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் மாத்திரம் வளர்ந்த திருச்சபையின் ஆயர்களே, 16ஆம் நூற்றாண்டிற்குப் பின் தென் அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும், ஆசியாவிலும், தோன்றிய திரு அவைகளைத் தங்கள் பார்வையில் வழி நடத்தினர். ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்கத்தின் பின் இந்தக் கண்டங்களின் பிரச்சினைகளின் மத்தியிலே, புதிய பயணங்களைத் துணிவுடன் ஆரம்பிக்க தூய ஆவியான வர் சுதேசிய ஆயர்களையும் குருக்கள் துறவியர் இறையியலாளர்களையும் கொடுத்து வருகின்றார்.

**6.4 வத்திக்கான் சங்கம் ஆசிய மதங்களையும், பண்பாடுகளையும் புதிய கண்ணோட்டத்தில் துணிவுடன் நோக்கியது**

ஆசியாவிலே விசேடமாகத் திருஅவைகள் சிறுபான்மையாக, பல மதங்கள் பல கலை, கலாசாரங்கள் நிறைந்த பண்பாட்டு சூழலிலே இருக்கின்றன. இதனால் 2ஆம் வத்திக்கான் சங்கம் கொடுத்த சிந்தனைகள், ஆசியாவின் இளம் திருஅவைகளுக்கு ஒரு புதிய பிறப்பைக் கொடுக்கும் பெந்தக்கோஸ்தாக இருக்கின்றது.

மனிதரின் மறுபிறப்பைப் போதிக்கும் இந்து, புத்த மதங்களைக் கொண்ட இக்கண்டத்திலே, மனித மறுபிறப்பைப் பற்றி அல்ல, எமது உலகின் யதார்த்தங்களான மதங்கள் கலை கலாசாரங்கள் பண்பாடு அனைத்தையும் நேர்மையாகக் கணித்து, திருஅவைகளின் பார்வையையும், புதிய சவால்களைச் சந்திக்க வேண்டிய தேவையையும், அதற்கான ஒரு பயணத்தைத் தொடங்க வேண்டிய தேவையையும் சங்கம் உணர்த்தியது. ஆகையினால் இது ஆசியாவில் இருக்கும் சகல திரு அவைகளுக்கும் ஒரு திருப்பு முனை - அதாவது, இறையரசை ஆயத்தபடுத்த, திசைகளை மாற்றிப் பயணத்தைத் தொடர வேண்டிய ஒரு கட்டமாக அமைகின்றது.

தமிழ்க் கிறிஸ்தவத்தைச் சீர்திருத்துவதென்பது, எம் எல்லோருக்கும் - மக்களுக்கும் தலைவர்களுக்கும் - பரிசுத்த ஆவியாரின் அழைப்பு. சவால்கள் நிறைந்தது, மனித பெலத்தால் கண்டடைய முடியாது. இறைவன் எம்மோடு இருக்கின்றார், என்ற நம்பிக்கையில் மாத்திரம் நோக்கத்தை அடைய முடியும்.

நீண்ட காலமாகத் தமிழ்க் கிறிஸ்தவர்கள் வீட்டிலும் சமூகத்திலும் பின்பற்றிய சில முறைகளை மாற்றி அமைக்கும்படி வேண்டப்படுகின்றனர். மனிதர்கள் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் எமது சகோதரரென்று ஏற்றுகொள்ளபட வேண்டும். அதாவது சமாளிக்கும் கிறிஸ்தவம் மாறி, கிறிஸ்தவ விசுவாசத்திலே வாழத் துணிய வேண்டும். அத்துடன் நாம் மற்றைய மதங்களுக்கு எதிரானவர்களோ, மேலாகவோ அல்ல என்பதை நாங்களும் புரிந்து, எமது பிற இன மத சகோதரர்களும் அப்படி எம்மைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும்.

அப்போது தான் தமிழ் மக்கள் மத்தியில் நாம் ஒளியாகவும் உப்பாகவும் செயற்படலாம். மனிதர்களினால் உருவாக்கப்படும் சமயங்களில் தவறுகள் தோன்றுவது சர்வ சாதாரணம். எமது கிறிஸ்தவத்திலும் தவறுகள் இருக்கின்றன. அதற்காகவே எப்போதும் நாம் எம்மை, எமது கால பெரியோர்களின் வழிகாட்டலில் புதுப்பிக்க வேண்டும். இராமசாமி பெரியாரின் சுய மரியாதை இயக்கத்தை ஓர் உதாரணமாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.


**6.5 தமிழ் நாட்டில் இராமசாமிப் பெரியாரின் - சுய மரியாதை இயக்கம்**

தமிழர்கள் மத்தியில் பல விதமான குறைகள் இருக்கின்றன. அவைகளில் மிக முக்கியமானதொன்று எம் மத்தியில் நீண்ட காலமாகப் பரம்பரையாக, மதத் தலைவர்களின் ஊக்குவிப்புடன் தொடரும் பணம் பதவி சாதி வேற்றுமைகள். இவைகளை மாற்ற சமூகத் தலைவர்கள் முயற்சிக்கின்றனர். மற்றைய தலைவர்களும் இதற்காகவே நான் தமிழ் நாட்டில் இராமசாமிப் பெரியாரின் சுய மரியாதை இயக்கத்துடன் சென்னையில் அதன் தலைவர் வீரமணி ஐயருடன் தொடர்பு கொண்டேன்.

(தொடரும்....)

காவலன் கலசம்

# இலங்கை வேந்தன்




மனோ சின்னத்துரை

**அன்புள்ள பரம் அண்ணை , கலாக்கா,**

உங்களுக்கு எப்படி முகம் கொடுப்பது என்று தெரியாத நிலையில் இவ்விதமாக எழுத்தில் வடிக்கிறேன். தயவு செய்து என்னை மன்னியுங்கள்!

இந்தக் கடிதம் உங்களுக்குக் கோபத்தையும் கவலையையும் ஒருசேரத்தரும் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் உங்கள் முகத்திற்கு நேராக இதைச்சொல்லும் தைரியம் எனக்கில்லை என்பதைத் தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள்!

ஏறத்தாழ எட்டு வருடங்களாக நீங்கள் என்மீது காட்டிவரும் இரக்கத்திற்குத் தலை வணங்குகிறேன். உங்களை ஒத்த நண்பர்களெல்லாம் என்னை என்னமாதிரியெல்லாம் திட்டித் தீர்த்தார்கள். எவ்வளவு கேவலமாக வசைபாடினார்கள். எனது மனைவி குழந்தைகளுக்கு முன்னால் நான் எத்தனை நாட்கள் கூனிக்குறுகி அனாதையாய் நின்றிருக்கிறேன். எத்தனை இரவுகள் நித்திரையின்றித் தவித்திருப்பேன். எத்தனை தடவைகள் தற்கொலைக்கு முயன்றிருப்பேன்! ஆனாலும், அதற்கும்கூடத் துணிவில்லாத ஒரு கோழை நான்.

ஓம். நான் தவறுக்குமேல் தவறிழைத்து விட்டேன். மன்னிக்கமுடியாத தவறுகள். எனது வாழ்நாளில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் நான் பேசிய பொய்களுக்கு அளவேயில்லை. ஒன்றிலிருந்து தப்ப இன்னொன்று, அதிலிருந்து தப்ப இன்னொன்று. இவ்வாறாகப் பொய்களுக்குள்ளேயே வாழ்ந்தேன். பொய்களுக்குள்ளேயே உழன்றேன். அதை விட எனக்கு வேறுவழி தெரியவில்லை. ஒரு குழந்தைப்பிள்ளைபோல நான் சொல்லிய பொய்களெல்லாம், உங்களுக்கு எவ்வளவு சினத்தையும் கோபத்தையும் உண்டு பண்ணியிருக்கும் என்பதை இப்போது உணர்கிறேன்.

நான் செய்த முதல் தவறு இதுதான்.

நாட்டுச் சூழலுக்குள் சிக்குப்பட்டிருந்த எனது தம்பியை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப அறாவட்டிக்குக் கடன்பட்டது தான். ஆனால் தம்பியும் போய்ச் சேரவில்லை . திருப்பி அனுப்பப்பட்டு இலங்கையில் போய் நிற்கிறான். அவனுக்கும் ஒரு குடும்பம் இருக்கிறது. பாசத்தின் நிமித்தம் இருபதினாயிரம் யூரோக்களை ஐந்து வட்டிக்குக் கடன் எடுத்தேன்.

ஆரம்பத்தில் சிரமப்பட்டு வட்டியை ஒழுங்காகக் கட்டி வந்தேன். மாதங்கள் வருடமாக அதுவும் எனக்கு மிகுந்த சிரமமாய்ப்போனது. வட்டி தந்தவர் நெருக்க, அதை அடைக்க இன்னொருவரிடம் கடன்பட்டேன்.

அந்தக்கடனும் இறுகிய போது அடுத்தவரிடம்.

இப்படியே மாறி மாறிக் கடன்பட்டேன். வட்டிகளை ஒழுங்காகச் செலுத்தி வந்த காரணத்தால் எனக்கும் கடன்கள் சுலபமாகக் கிடைத்தன. இந்தச் சுலபம், என்னைப் பொறிக்குள் சிக்கவைக்கும் என்பதை அப்போதைக்கு என்னால் உணரமுடியவில்லை.

பொய் சொன்னேன்.

என்னுடைய வருமானம் 1300 யூரோக்கள் மட்டுமே! இது எனது வீட்டு வாடகைக்கும், வீட்டுப் பராமரிப்புச் செலவுகளுக்கும் மட்டுமே போதுமாயிருந்தது. அற்பமாக வந்த 'அலக்கேசன்' காசில் எங்கள் சாப்பாட்டுச் செலவைச் சமாளித்துக்கொண்டோம்.

எல்லாப் பிள்ளைகளும் 'வக்கேசன்' போக, புதிய புதிய மார்க் உடுப்புகள் போட என்னுடைய பிள்ளைகள் என்னுடைய முகத்தைப்பார்க்கும் தருணங்களில் செய்வதறியாது திணறுகிறேன். சராசரி குடும்பப்பெண்ணான எனது மனைவி கொண்டாட்டங்களைத் தவிர்க்கிறாள். நிலைமை உங்களுக்குப் புரியும்.

இதை எல்லாம் எழுதி அனுதாபத்தைத் தேடும் நோக்கம் எனக்கில்லை. எனது வாழ்வின் கடைசியான இந்தத் தருணத்திலாவது உண்மை பேசவேண்டும் என்ற ஒரே ஆதங்கம் மட்டுமே!

நம்பினால் நம்புங்கள்! எனக்கு நீங்கள் மட்டுமே கடன் கொடுத்தவர் அல்ல. வெட்கத்திலும், என் மீதான நம்பிக்கையை சிதறவிடாது பாதுகாப்பதிலும் குறியாக இருந்தேன். எல்லாவற்றையும் எல்லோரிடமும் மறைத்தேன். எனது கடன்களைக் கூட்டிப்பார்க்கவே எனக்குத் திராணியில்லை. குத்துமதிப்பாக ஒரு இலட்சம் யூரோக்களுக்குமேல் வரும். மூவாயிரம் யூரோக்களுக்குமேல் வட்டி வரும். என்னுடைய வருமானத்தில் மூவாயிரம் வட்டி கட்டுவதென்பது சாத்தியமான விடயமல்ல.

நான் கடன்படும் போதெல்லாம் பொய்களை மாறிமாறிச் சொல்லியே எல்லோரையும் நம்பவைத்தேன். எல்லோரையும் ஏமாற்றினேன்.

நான் பட்ட இருபதினாயிரம் மட்டுமல்ல என்னுடைய அறியாமையும் சேர்த்தே என்னை இந்த நிலைக்குக் கொணர்ந்து விட்டிருக்கிறது.

நீங்கள் வட்டிக்குக் காசு தந்தவர்கள். நியாயம் அநியாயத்திற்கு அப்பால் உங்கள் வலி எனக்குப் புரிகிறது. தயவு செய்து என்னையும் புரிந்துகொள்ளுங்கள்! மன்னித்துக் கொள்ளுங்கள்!!

எப்படியாவது இந்த ஜென்மத்தில் உங்கள் கடனை அடைப்பேன். எனது மூத்த மகன் இன்னும் ஒரு சில வருடங்களுக்குள் வேலைக்குச் செல்வான். அவன் உங்கள் கடனையெல்லாம் அடைப்பான் என்று நான் திரும்பவும் ஒரு பொய்யைச்சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கும் ஒரு வாழ்க்கை இருக்கிறது. எங்கள் தவறுகளையெல்லாம் ஒன்றுமறியாப் பிள்ளைகள்மேல் இறக்கிவைக்க முடியாது. ஆனாலும், அவன் என்னுடைய மகன். அவனைத் தொடர்ந்தும் எனக்குப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் சிறிய சிறிய பங்குகளையாவது பொறுப்பெடுத்துக் கொள்வார்கள்.

தயவு செய்து இந்த இடத்திலாவது திட்டமிட எனக்கு ஒரு அவகாசத்தை வழங்குங்கள்! வட்டிக்கு வட்டி கட்ட என்னால் இனி முடியாது. தயவுசெய்து வட்டிக் கணக்கை இந்த மாதத்தோடு நிறுத்துங்கள்! புதுக்கணக்கைப் புதிதாய் ஆரம்பிக்க எனக்கு உதவுங்கள்! நான் உங்களிடம் கைநீட்டிக் காசு வாங்கியவன். நான் இப்படிக் கேட்பது எவ்வகையிலும் நியாயமில்லை. ஆனாலும் எனக்கு வேறு வழியில்லை. தயவுசெய்து கோபிக்காதீர்கள்.

இப்படிக்கு
என்றும் நன்றியுள்ள
இலங்கை வேந்தன்

**நன்றி : கொரோனா வீட்டுக் கதைகள்**


நித்திய குருவாகிய இயேசுக்கிறிஸ்துவின்
குருத்துவப் பணியில்
60 ஆவது ஆண்டு




அருட்பணி P.P.பிலிப் அ.ம.தி.
பாசையூர் மண்ணின் மைந்தன்
13.04.2022 தனது குருத்துவப் பணி வாழ்வின்
60 ஆவது ஆண்டின் நிறைவில் இறைத்தந்தைக்கு நன்றி கூறுகிறார்.
தொடர்ந்தும் உடல் நலத்துடனும், ஆன்ம பலத்துடனும் வாழ
வேண்டும் என்று வெளிநாடுகளில் இருக்கும் சகோதர குடும்பங்களும்
உள்நாட்டில் இருக்கும் சகோதர குடும்பங்களும்,
அருட்சகோதரிகள் லொறின்டா, கெலன் திரேசாவும்,
பாசையூர் மண்ணின் அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும்
உற்றார் உறவினர்களும், நண்பர்களும்,
பங்குத் தந்தையும், பக்திச் சபையினரும்,
பாசையூர்ப் பங்கு மக்களும்,
வாழ்த்தி நிற்கின்றனர்.

பி.பி.பிறின்ஸ்
14, 2ம் குறுக்கு வீதி
பாசையூர்
யாழ்ப்பாணம்

AD-32 0777570267- 021 222 3179


## கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பகிர்வோம்

இயேசுவின் உயிர்ப்பு
பூவுலகையும் மனிதர்களையும்
மீட்டெடுக்கும் என்ற
நம்பிக்கையை
உள்ளத்தில் பதித்த வண்ணம்
உயிர்ப்புப் பெருவிழாவாம்
இந்நாளில்
அவர் தம் பாதம்
ஒவ்வொரு மனிதரும்
சரணாவோம்

கண்ணீர், கஷ்டம் அனைத்தையும்
தொங்கவிடுவோம்
சிலுவையில் விழுந்தோருக்குக்
கைகொடுப்போம்
எழுந்தோருக்குத்
தோள் கொடுப்போம்

தேசிய மொழியாம் அன்பை
அறிவிப்போம் அனைவருக்கும்
வளமும் நலமும்
ஒவ்வொருவர் வாழ்விலும்
உயிர்த்தெழட்டும்

சிலுவையின் வழியில்
நம்மை இரட்சிக்க
தன் தந்தையின்
திருவுளத்தை நிறைவேற்றிய
இயேசுவைப்போல்
நாமும் உலக இன்னல்களை
ஏற்று அதையும் தாண்டி
கிறிஸ்துவின் உயிர்ப்பைப்
பகிர்வோம் மகிழ்வோம்

அருள்மதி ஷெர்வின்
மல்வம், உடுவில்

# காவலன் கலசம்



# என் கேள்விக்கென்ன பதில்!

கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!

அருட்பணி செ. அன்புராசா

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: மரணப் படுக்கையில் கிடக்கும் நம் இலங்கைத் தேசம் உயிர்க்குமா?**

ப: யோசப், நம் தேசம் பழி சுமக்கும் தேசம்! இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால், இன்னும் எத்தனையே அடக்குமுறைக ளால் உயிர்களை உறுஞ்சிக் குடித்த தேசம்! அப்பழிபாவங்களுக்காகஒருபோதும்வருந் தாத, பாவப்பரிகாரம் செய்யாத தேசம்!இவ் வாறு இருக்கையில் எப்படி இத்தேசம் உயிர்பெறும்? நினிவே போன்று, மனம் மாற்றத்திற்கான இறைவனின் அழைப்பை ஏற்று, கோணி உடை உடுத்தி சாம்பலில் உட்கார முன்வந்தால் உயிர்ப்பு உண்டு! இல்லையேல் அழுகையும் பற்கடிப்பும் தொடரும்!

*(அன்ரன், மன்னார்)*

**கே: பிறப்பு, இறப்பு, உயிர்ப்பு இவை பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: அம்மாடி! என்ன அன்ரன்? இப்படிக் கேள்வியைக் கேட்டு என்னைப் பயமுறுத் தாதீர்கள்! பிறப்பென்றால் இறப்பு இருக்கும் தானே. இறப்பென்றால் உயிர்ப்பும் உண்டு தானே! வாழ்க்கை தோன்றி, மறைந்து, தொடர்கின்றது!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: சாதாரண ஏழை மக்களின் அன் றாடவாழ்க்கைப்பிரச்சினையைப்புரியா மால் அவசரகாலச் சட்டத்தை அமுல் படுத்தியிருக்கும் இன்றைய இலங்கை அரசின்போக்கு எப்படி இருக்கின்றது?**

ப: ஆனந்தன், சாதாரண ஏழை மக்களின் அன்றாடவாழ்க்கைப்பிரச்சினையை இந்த அரசு எப்போது புரிந்து செயற்பட்டிருக்கின் றது என்று ஒருதடவை சொல்லுங்கள் பார்க்கலாம்! நாட்டின் பொருளாதாரத்திற்கு எந்தப் பிரயோசனமும் இல்லாத, எந்த வரு வாயையும் பெற்றுத்தராத கொழும்பில் கட்டப்பட்ட தாமரைக் கோபுரம், அம்பாந் தோட்டையில் அமைக்கப்பட்டுள்ள மத்தள விமான நிலையம், சூரியவெவ விளையாட் டரங்கு போன்ற பலவற்றுக்குப் பலநூறு மில்லியன் டொலர்களை அநியாயமாகச் செலவழித்து இப்போது நாட்டின் பொருளா தாரத்தை நடுறோட்டில் கொண்டுவந்து விட்டிருக்கின்றது இன்றைய அரசு. இவை போன்ற காரணங்களால் ஏற்பட்டதே இன் றைய பொருளாதார வீழ்ச்சி! இப்போது மக்களின் எதிர்ப்பை அடக்குவதற்காக அவ சரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருக் கின்றது அரசு! ஆனந்தன், அவசரகாலச் சட்டத்திற்குப் பதிலாக 'அந்திம காலச் சேவை'யை அமுல்படுத்தியிருந்தாலாவது ஒருவேளை பயன்பட்டிருக்க வேண்டி ஏற்படலாம்!

*(சுதா, யாழ்ப்பாணம்)*

**கே: 2020ம் ஆண்டு ஈஸ்ரர் தினத்தில் குண்டு வெடித்தது. 2021ல் கொரோனா வைரஸ் குண்டு வெடித்தது. 2022ல் என்ன வெடிக்க இருக்கின்றதோ?**

ப: சுதா, அதுதான் ஏற்கனவே தென் பகுதியில் வெடித்துவிட்டதே!

*(சசி, யாழ்ப்பாணம்)*

**கே: மிகவும் இறுக்கமான சூழலில் வாய்விட்டுச் சிரிக்கச் சிந்திக்க ஒரு ஜோக் சொல்லமுடியுமா?**

ப: நிச்சயமாக சசி. ஒருநாள் மனிதன் ஒருவனின் மூளையில் இருந்த அத்தனை நினைவுகளையும் அழித்துவிட்டுக் கடவுள், "உனக்கு இப்போது ஏதாவது ஞாபகம் இருக்கின்றதா?"எனக் கேட்டார். உடனே அவன் தன் மனைவியின் பெயரை உச்சரித்தானாம். கடவுள்,'சிஸ்ரத்த புள்ளா அழிச்சு போமற் பண்ணினாலும் வைரஸ் போகுதில்லையே!' எனக்கூறி தன் தலை யில் அடித்துக்கொண்டாராம்!

*(மேரி, மன்னார்)*

**கே: நல்ல கணவன் மனைவியாக இருப்பதற்கு இருக்கவேண்டிய மிக முக்கியமான பண்பு எது?**

ப: ஒரு நல்ல கணவன் செவிடனாக இருக்கவேண்டும், ஒரு நல்ல மனைவி குருடியாக இருக்கவேண்டும்! என ஒரு பிரான்சியப் பழமொழி கூறுகின்றது. செயற் படுத்திப் பாருங்கள் மேரி, வாழ்க்கை வசமாகும்!

*(லதா, கொழும்பு)*

**கே: இப்படியெல்லாம் பதில்களைச் சொல்ல,எப்படி உங்களால் முடிகின்றது?**

ப: லதா அக்கா, இந்தக் கேள்வியைத்தான் நானும் இத்தனை நாட்களாக கேட்டுக் கொண்டு வருகின்றேன்! பதிலே தர மாட்டாங்கிறாரு!

*(மதன், மன்னார்)*

**கே: வாழ்க்கைச் செலவுகள் ஜெற் வேகம் அடைந்திருக்கும்போது எப்படி வாழலாம் என்று கூறுவீர்களா?**

ப: பிழையான பொருளாதாரக் கொள்கைகளால் நாடு சின்னாபின்ன மடைந்து கிடப்பது உண்மைதான். அத னால், நம் அன்றாட வாழ்க்கைச் செல வீனங்கள் அசுர வேகத்தில் அதிகரித்திருக் கின்றது. இருப்பினும், தேவையில்லாத செலவுகளை முதலில் தவிர்க்கப் பாருங் கள் மதன். அடுத்திருப்பவரைப் பார்த்து வீட்டைக் கட்டுவது, கடன் பட்டு வீட்டைப் பெருப்பிப்பது, அடுத்தவீட்டு வளவைப் பார்த்து இருக்கின்ற நல்ல மரங்கள் உள்ள வேலியை வெட்டியெறிந்துவிட்டு மதில் கட்டுவது, இருக்கின்ற சமையலறை போதாதென்று சமையலறையை உடைத்து விட்டுப் பெருப்பிப்பது போன்றவற்றை உடன டியாக அடியோடு நிறுத்தி நம்முடைய வரவுக்கு ஏற்ப செலவைச் செய்து வீணாக்கு வதை முற்றாகத் தவிர்த்து வாழப் பழகிக் கொள்வது அவசரமானதும் அவசியமா-னதும் ஆகும்.

*(தாசன், யாழ்ப்பாணம்)*

**கே: இன்றைய எம்முடைய வியா பாரிகளுக்கு மனசாட்சியோடு பொருட் களை விற்பனை செய்வதற்குத் தங்க மான அறிவுரை ஒன்றைச் சொல் வீர்களா?**

ப: தாசன், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுகின்றபோது வியாபாரிகள் மிக முக் கிய புள்ளிகளாக மாறிவிடுகின்றார்கள்! ஏனென்றால், மக்களின் அன்றாட வாழ்க் கைப் போக்கை ஒருவகையில் தீர்மானிப் பவர்கள் இவர்கள் தான்! எனவே, இவர் கள் நீதியோடு இல்லாவிட்டாலும் நியாய மாக நடந்துகொள்வது ஏழைமக்களை விரக்தி நிலைக்கு இட்டுச்செல்லாது காப் பாற்ற உதவும்! அந்தவகையில், 'எங்கட அப்பு' ஒருதடவை இவங்களைப் பற்றிச் சொன்னதை இவர்களுக்கு ஆலோசனை யாக முன்வைக்கின்றேன்: "இந்தத் துலைவான்கள், போகும்போது காசை மூட்டை மூட்டையாக் கட்டியே கொண்டு போகப் போறாங்கள்! கொஞ்சமெண்டா லும் மனச்சாட்சியோட யாவாரம் செய்ய வேணும். தகரத்துக்கு வில கேட்டால் தங்கத்தின்ர விலையைச் சொல்லுறான், பரதேசி! "தாசன், நீங்கள் அறிவுரைதான் கேட்டீர்கள்! ஆனால், எங்கட அப்புவின்ர அபிப்பிராயமும், அவதானிப்பும், அறி-வுரையும்எப்படிஇருக்குத்தாசன்அண்ணா!

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர்
## ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.



யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

**ஊடகத் தொடர்பு சாதனங்களில்**

ஆயரின் அபிஷேகத்தின் போது, ஓர் சுதேச ஆயரைப் பெறுகின்றோம் என்ற குடும்ப உணர்வு கத்தோலிக்கர் மத்தியிலும் ஏனையோரிடமும் மேலோங்க, இலங்கைத் தீவில் பல்வேறு மட்டங்களி லும் பிரபல்யமானவராகவும் பிரதமர் முதல் பாமரர் வரை பலராலும் அறியப் பட்டவராகவும் விளங்கிய எதிர்காலத் தமிழ் சுதேச இளவரசர்களின் முன் னோடி என்ற வகையில் இந்நிகழ்வு மிக வும் முக்கியம் பெற்றதெனலாம். எனவே ஆன்மீக ரீதியில் மிகவும் கோலாகல மாகவும், ஆடம்பரமாகவும் இடம்பெற்ற இந்நிகழ்விற்குக் கொழும்பு ஒலிபரப்புச் சேவை உட்படப் பல செய்தி ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்தன.

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஏடான பாதுகாவலன் தனது Catholic Guardian என்னும் ஆங்கில, தமிழ் இணைப்பில் மிகவும் முக்கியத் துவம் கொடுத்து வெளியிட்டது.

1949.05.19இல் வெளி வந்த விசேட பதிப்பும், 1949.05.26 இலும் 1949.06.02 இலும் வெளிவந்த இதழ்களும் ஆயரின் குடும்பப் பின்புலம், அவரது ஆளுமை, குருத்துவப்பணி, அபி ஷேக நிகழ்வு போன்ற விடயங்களைப்பற் றிப் பல கட்டுரைகளையும் படங்களையும் தாங்கி வந்துள்ளன. இதேபோன்று இவ ரது இறப்பு 1972.07.17 இல் இடம்பெற்ற போது 1972.07.22 இல் வெளிவந்த இதழ், "ஆயன் என்ற சொல்லிற்கு ஆட்சி தந்த திருவே, தூயன் இடம் சென்ற னையோ தூது சொல்லக் குருவே" என் னும் கவிதை வரிகள் உட்பட பல படங் கள், கட்டுரைகள், செய்திகளுடனும் அருட்பணி. நீ.மரியசேவியரின், ஆயர் பற்றிய இறுதி நிமிடங்களின்,"தங்க இத யமே தங்க நீ எங்கு சென்றாய்" என்னும் வர்ணனையுடனும் அஞ்சலித்தது.

1972.07.29இன் பாதுகாவலன் 32ம் பக்க சிறப்பிதழில் வெளிவந்த பல விடயங்களையும் சேர்த்து 80 பக்கங்களா கக் கொழும்பு லூசியா பேராலயத்தில் வைக்கப்பட்டதில் இருந்து, பலாலி விமான நிலையமூடாகப் பூதவுடல் யாழ்ப் பாணத்திற்கு வந்து, கல்லறையில் வைக் கப்படும் வரையான படங்களுடன், 1973 இல் ஆயரது ஓராண்டு நினை வில் அகவணக்க வெளியீடாகவெளிவந்த "கனவும் நிறைவும்- Man of Vision, Mission fulfilled" மலர், அவரது வாழ்வை யும் பணியையும் சிறப்பித்துள்ளது.

இவை தவிர Novena News, Ceylon Daily Mirror, Times of Ceylon, Ceylon Daily News, Sun, The Catholic Messenger போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த விடயங்களையும் இந்நூல் தாங்கி வந்துள்ளது.

1972 டிசம்பர் மாதம் திரு. எஸ். எம். யோசவ் அவர்களைப் பிரதம ஆசி ரியராகக் கொண்டு யாழ். புனித சூசை மாமுனிவர் அச்சகத்தால் வெளியிடப்பட்ட 'கரம்பொன் பங்கு மலர் 1972' என்னும் நூல் இவரைப்பற்றிய கட்டுரையொன் றைத் தருகின்றது. புனித பத்திரிசியார் கல்லூரி 1975இல் வெளியிட்ட 125ஆவது ஆண்டு மலரும் 2000இல் வெளியிட்ட 150ஆவது ஆண்டு மலரும் புனித கென்றியரசர் கல்லூரி 1979இல் வெளியிட்ட 'The Henrician 1979' மலரும் இவர் தொடர்பான குறிப்புகளைத் தருகின்றன. அத்தோடு 1977இல் சுவாமி ஜெயசீலன் J.E., எழுதி 102, பிரதான வீதி, யாழ்ப்பாணம், வளன் ஆச்சிரமத் தால் வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு', இவரது வாழ்வை யும் பணியையும் பற்றிக் கூறுகின்றது. 2001 இல் யாழ். புனித வளன் அச்சகத் தில் இருந்து வெளிவந்த 'பாதுகாவலன் 125ஆவது ஆண்டு மலர்' இவரது ஆளு கைக் காலத்தில் இவரது திறமையால் எவ்விதம் பாதுகாவலன் வளர்ச்சியடைந்தது என்று கூறுகின்றது.

யாழ். மறையாசிரியர் சங்கத் தால் 1972 டிசம்பரில் இவருக்கு அர்ப்பண மாக்கி வெளியிடப்பட்ட மலரில் 'காணிக்கை','எம் இதய எழிலே! ஏன் மறைந்தாய் எமிலே!' என்னும் கவிதை களும் 'மறைந்த ஆயரும் மறை யாசிரியர் முழுவும்' என்னும் மறைப் போதகர் அ. மருசலீனின் கட்டுரையும் காணப்படுகின்றன.

(தொடரும்...)

## என் கேள்விக்கென்ன பதில்!

( 10ம் பக்கத் தொடர்ச்சி)

*(குமரன், யாழ்ப்பாணம்)*

**கே: பொருளாதார நெருக்கடியால் தென்பகுதி மக்கள் கிளர்ந்தெழுந்துள்ள நிலையைச் சமாளிக்க ஊரடங்குச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்ற வற்றை அரசு பிரயோகிக்கின்றது. இதனால் பாதிக் கப்படுவது சாதாரண ஏழைகள். இதனைக் கூடவா அரச தலைவர்களால் புரிந்துகொள்ள முடியா திருக்கின்றது?**

**ப:** குமரன், ஊரடங்குச் சட்டம் பிறப்பித்த நாள் மாலை நடந்த ஒரு சம்பவத்தைக் கேளுங்கள். முகநூலில் படித் தேன். ஏழைமக்களின் நிலையையும் அவர் உணர்வுகளை யும் இதனைவிட எப்படிச் சொல்லலாம் என்று எனக்குத் தெரியவில்லை! "என்ன ஆச்சி 6 மணிக்கு ஊரடங்கு எண்டு சொன்னாங்க. 8 மணி ஆகிட்டு. நீங்க இன்னும் இடியப்பம் அவிச்சிட்டு இருக்குறீங்க. கடைய பூட்ட இல் லையா?" ஆச்சி: 'அவன் கிடக்கிறான் விசரன். அவனுக் குத் தெரியுமா எங்கட கஸ்ரம்? சாமான் விக்கிற விலைக்கு எல்லாத்தையும் வேண்டிச் செய்த சாப்பாட்ட அவனா வந்து வேண்டுவான். அவன் ஊருக்குப் பயந்து நாட்டைப் பூட்டினா நாங்க இவனுக்குப் பயந்து கடையப் பூட்டுறதா? ஓசியில இருந்து தின்னுற அவனுக்கு, தினசரி நெருப்பில நிக்கிற எங்கட நிலைமை எப்பிடித் தம்பி அவனுக்கு விளங்கும்? அவன் 4 மணிக்கு சொல்லு வாராம் ஊரடங்கு எண்டு. உடனே நாங்க 6 மணிக்கு வீட்டுக்குள்ள போயி ரணுமாம்! நல்லா இருக்கு இது! வரட்டும் தம்பி, வந்து சுடட் டும். நாங்க சாகவும் தயார் தான் ராசா. அந்த விசரன்ட கதைய விட்டுட்டு, நீ சொல்லு தம்பி, உனக்கு எத்தின இடியப்பம் வேணும்?"

*(கலை, யாழ்ப்பாணம்)*

**கே: யாரை வாக்குகளால் தெரிவுசெய்தார்களோ அவர்களையே தூக்கியெறியும் தென்பகுதி மக்க ளைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கின்றது! இப்படி நடக்கும் என்று எதிர்பார்த்தீர்களா?**

**ப:** கலை, மின்சாரம், எரிபொருள், சமையல் எரிவாயு, பால்மா, பேப்பர் எல்லாவற்றிலும் கைவைக்கும்போது மக்கள் விட்டுவிட்டார்கள், பொறுத்திருந்தார்கள், சகித்துக் கொண்டார்கள்! ஆனால், வயிற்றில் கைவைத்தால் மக்கள் தான் என்ன செய்வார்கள்!

*(குமரன், யாழ்ப்பாணம்)*

**கே: பதவிகளில் இருந்துகொண்டு அதிகாரத் திமிர்பிடித்து அலைபவர்கள் குறித்து என்ன கூறுவீர்கள்?**

**ப:** குமரன், பதவிகளால் கிடைக்கும் அதிகாரம் பணிக ளைச் செய்வதற்கே என்பதைப் புரிந்துகொண்டால் திமிருக் குப் பதிலாகத் தியாகத்தோடு பணிகளைச் செய்யலாம். மேலும், எந்தக் கதிரையும் எவருக்கும் சொந்தமுமில்லை, எவருக்கும் நிரந்தரமுமில்லை என்பதைப் புரிந்து கொண்டுசெயற்படுகின்ற அதிகாரிகள் தங்களுக்குக்கிடைக் கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு ஆடமாட்டார்கள், அர்ப்பணிப்போடு பணிசெய்வார்கள். கிடைக்காதது கிடைத்துவிட்டால் ஆனந்தக் களிப்பிலும் சிலர் இவ்வாறு தான் ஆடுவார்கள். ஆயினும், இந்த ஆட்டங்களும் அசைவு களும் கொஞ்ச நாட்களுக்குத்தான்! இப்படிப்பட்டவர்கள் தங்கள் கதிரைகளிலிருந்து இறங்கியதும் ஆப்பிழுத்த குரங்கின் நிலையை உணர்வார்கள். வாழ்க்கையே நிரந்தரமில்லை! அதற்குள் பதவிகளால் கிடைக்கும் சிலநாள் அதிகாரத் திமிரால் எதைத்தான் சாதிக்கப் போகின்றார்கள்!? தங்களுக்கென்று இருக்கின்ற சிறு மரியாதையை யும் விரைவில் இழந்துபோய் இஞ்சிதின்ற குரங்கின் நிலையைத்தான் அனுபவிப்பார்கள்!

# பாஸ்கா கொண்டாட்டம்

(04ம் பக்கத் தொடர்ச்சி)

ணங்களும், அதில் நாம் பறிகொடுத்த உறவுகளும் எம் மனக் கண்களில் காட்சிகளாய் தென்படும்; சோதனை களும், வேதனைகளும் கலந்து நின்ற வாழ்க்கையில் புயல் வீசிய நாட்கள், அங்கே எம் இறை நம்பிக்கையைத் தொலைத்து விட்டு நாடிச் சென்ற பொன்கன்றுக் குட்டிகள் கூட எங்களுக்கு ஞாபகம் வரும். இவ்வாறு இஸ்ராயேல ரைப் போல் எமக்கும் பல பாலைநில விடுதலைப் பயண ஞாபகங்கள் நாம் நடந்து வந்த பாதைகளில் பரவிக் கிடக்கின்றன.

முள்ளிவாய்க்கால் பிணக்காட்டு அனுபவப் பிர **சவத்துடன் நாம் செங்கடல் என்று நினைத்த நந்திக் கடலைத் தாண்டி வந்து, நாம் நுளைந்ததோ புதிய எகிப்திய தேசம் என்பது எங்களுக்குப் புரியவில்லை. நந்திக்கடலுக்கும் புதிய எகிப்துக்குமிடையில் நாம் அடைபட்டுக் கிடந்த பாலை வனம் எங்களுக்கு இப் போது ஞாபகம் இல்லை. புதிய எகிப்தில் நாங்களோ எங்களுக்கென்று சிறிய சிறிய சிறைகளைக் கட்டி எம் கைகளுக்கு விலங்குகளையும் மாட்டிக்கொண்டோம். மின்சார வெளிச்சத்துக்குள் எம் வாழ்வு இருண்டு போனது. கடந்தகால கால்நடைத் தூரங்களையெல்லாம் நாம் கார்களில் கடக்கப் பழகினோம். இயந்திர வேகத்தில் நாட்கள் செல்லச் செல்ல நாமும் இயந்திரங்களாக மாறி னோம். இயந்திர வாழ்க்கை இயக்கத்தில் எம் குடும்ப உறவுகள் மட்டிலேயே நாம் காணாமற்போனோர் பட்டியலில் இணைக்கப்பட்டோம்.** அன்று குண்டுக ளின் சத்தம் மாத்திரமே பலமாகக் கேட்டது. ஆனால் புதிய எகிப்திய தேசத்தில் குண்டுவெடித்தால் கூடக் கேட் காத அளவுக்கு எம்மைச் சுற்றிப் பல சத்தங்கள். அதுமட்டு மல்ல புதிதாய் கண்டுபிடிக்கப்பட்ட சில செயலி கள் எம் காது களின் துவாரங்களை மூடிக்கொண்டன. அதனால் அடுத்தவன் அலறல் கூட பலதடவை எமக்குக் கேட்பதில்லை. கைத்தொலை பேசிக்குள்ளும் தொலைக்காட்சிப் பெட்டிக் குள்ளும் எம் விழிகள் வீழ்ந்துபோய்க் கிடப்பதால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாக்கப்பட்டோம். காதிருந்தும் செவிடர்களாக்கப்பட்டோம். அன்று உயிருக்குப் போராடிய மக்களின் சத்தங்களுக்கு மௌனமாய் இருந்தவர்கள் எல் லாம் இன்று வெறுமனே மின்சார வெளிச்சத்துக்காகவும் எரிபொருள் பிரச்சினைக்காகவும் வீதிகளில் போராட்டம் நடத்துவதைப் பார்க்கும்போது 'என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே' என்று தான் செபிக்கத் தோன்றுகின்றது.

**முடிவுரை:**

கிறிஸ்தவம் என்பது ஒரு பாஸ்காக் கொண் டாட்டம். இது ஒரு நினைவுகூரல் நிகழ்வு. நாம் நடந்து வந்த, ஏன் கடந்து வந்த பாதைகளை மீண்டும் திரும் பிப் பார்ப்போமானால், மின்வெட்டு எமக்குப் பழக்கப்பட்ட விடயம்; மருந்துத் தட்டுப்பாடு என்பதும் எமக்குப் பரீட் சயமான ஒன்றுதான்; எரிபொருள் பற்றாக்குறை என்பது எமக்கு நன்கு அறிமுகமான பிரச்சினையே. போக்குவரத்துத் தடைகள் மற்றும் தாமதங்கள் இவையனைத்தும் எங் கள் நீண்டகால அனுபவங்கள். ஒட்டுமொத்தத்தில் நாங் கள் இப்போது அனுபவிக்கும் அனைத்துமே எங்கள் கடந்தகால பாலைநில அனுபவங்கள் எமக்குக் கற்றுத் தந்த பாடங்களே. எனவே எம்மை அன்று பக்குவப்படுத்திய இறைவனுக்கு நன்றி கூறுவோம். அப் பாலைநில அனு பவங்களுக்காக மீண்டும் மீண்டும் நன்றி கூறுவோம். அனுபவங்களே வாழ்வின் அழகிய பாடங்கள். பாஸ்கா வின் அர்த்தம் புரிந்தால் எங்கள் பாலைநிலங்கள் எமக்கு என்றும் அழகான பாடப்புத்தகங்களே! நினைவுகூருங்கள்!

## நன்மை செய்வதன் மூலம் ...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

காலை 11.30 மணிக்கு ஆயர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆயர் அவர்கள் தனது மறையு ரையில் "தவக்காலத்தில் செபம், தபம், தருமம் ஆகிய மூன்று வழிகளிலும் நன்மை செய்ய திருஅவை நம்மை அழைக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

திருப்பலிக்குப் பின்னர் சிறுவர் பந்தியினரைச் சிறப்பான விதத்தில் ஆயர் சந்தித்து உரையாடினார். ஒப் புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டதோடு, மாலையில் நற்கருணை ஆராதனை வழிபாடும் நடைபெற்றது. ஆராதனையை அருட்பணி. ஜேம்ஸ் நாதன் அடிகளார் மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகள் யாவும் புனித வின்சென்ற் டி போல் மத்தியசபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி.செ.நேச நாயகம் அடிகளாரின் வழநடத்துதலிலும், பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வரும், பருத்தித்துறைப் பந்தியின் ஆன்ம ஆலோசகருமான அருட்பணி. பெனற் அடிகளாரின் உதவியுட னும் சிறப்பாக நடைபெற்றது. இத்தியானத்தில் யாழ் மறைமாவட்டத்திலுள்ள 37 பந்தியிலிருந்து 150 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் பங்குபற்றினர்.

## உயிர்த்த இயேசு காட்டும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த இயேசு தமது பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாகக் கொணர்ந்த நம்பிக்கையூட்டும் புதிய வாழ்வு இதுவே! அச்சத்தோடும் எதிர்காலம் மட்டில் ஐயப்பாட னும் வாழ்ந்த சீடர்களுக்கு கிறிஸ்துவின் பாஸ்கா புதிய வாழ்வையும் நம்பிக்கையையும் கொடுத்தது. இன்றும் பெரும் பொருளாதார அரசியல் நெருக்கடியில் வாழும் எமக்கு இயேசுவின் உயிர்ப்பு புதிய வாழ்வையும், நம்பிக்கையையும் தருகின்றது.

"செயலற்ற நம்பிக்கை பயனற்றது என நான் எடுத்துக் காட்ட வேண்டுமா?" (யாக்கோ. 2:20) என்ற வினாவை யாக்கோபு எழுதிய திருமுகத்தில் நாம் படிக்கின்றோம். இத் தவக்காலத்தில் நாம் பல நற்காரியங்களைப் பரித் தியாகங்களுடன் மேற்கொண்டோம். அவற்றை நிறுத்தி விடாது தொடர்ந்து உயிர்த்த இயேசுவிற்கு சாட்சி பகர எம் செயல்களால் எண்பிப்போம்.

கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிக்க நாம் எடுக்கும் முயற்சிக்கு நீங்கள் தரும் ஆதரவிற்கு நன்றிகள் பல. திருஅவையுடன் பொதுநிலையினர் உடனிருந்து பயணிக்கத் தடைகளாகப் பரம்பரை ஆதிக் கம், கல்வி மீதான முக்கியத்துவம், குருக்களின் செயற் பாடுகளினால் திருப்தியின்மை, போன்ற கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் இவற்றைக் கருத்தில் ஏற்று எல்லோரும் பங்கேற்கும் திருஅவையாகச் செயற் படவேண்டும். கல்வி எமக்கு முக்கியமானது. கல்வியை மட்டுமே முக்கியப்படுத்தித் தனியார் கல்வி நிறுவனங் களின் செயற்பாட்டிற்காக முழு நேரத்தையும் ஒதுக்கி திரு அவையின் செயற்பாடுகளிலிருந்தும், மறைக் கல்வி வகுப்புக்களிலிருந்தும் விலகிவாழும் அவலச் சூழல் இன்று எம் இளையவர்களின் வாழ்வில் அவ தானிக்கப்படுகின்றது. ஞானம் அற்ற கல்வி 'விழலுக்கு இறைத்தநீர் போல" அமையும். எனவே எம் பிள்ளை களை ஞானத்திலும் அறிவிலும் வளர்க்க வேண்டும் என்பதை உணர்வோம். குருக்களும் எமக்காகப் பணியாற்ற வந்தவர்கள் என்பதை உணர்ந்து அவர்களின் பணியில் உடன் ஆதரவாவோம். உயிர்த்த இயேசு இப் பெரும் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து எம் நாட்டை மீட்டு எம் எல்லோருக்கும் நம்பிக்கை நிறை வாழ்வைத் தரவேண்டி ஆசி கூறி அல்லேலூயா வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
யாழ் ஆயர்.


# விண்ணக வாழ்வின் 05ம் ஆண்டு நினைவில்

பிறப்பு
18 . 04 . 1958



இறப்பு
18 . 04 . 2017

## அமரர் சாமிநாதர் யோசவ் அன்ரன்

**அன்பு மிகு அப்பா!**
உங்களைக் கண்கூடாகக் கண்டு
ஐந்து வருடங்கள்!
எங்கள் இல்லத்திற்கான உங்கள் கனவு இலக்கு
கைகூடியும் ஐந்து வருடங்கள்!
மறப்போமா உங்களை!
உங்கள் உருவாக்கத்தை.
அன்புப் பொழிவை, கடின உழைப்பை.
நம்பிக்கை நிறை வாழ்வை!
இறையன்பில் என்றும் மகிழ்ந்திருங்கள்
தோன்றாத் துணையாய்
எமக்காய் வேண்டிடுங்கள்

AD-35

புனித செபஸ்தியார் ஒழுங்கை,
சில்லாலை.

பிரிவில் வருந்தும்
குடும்பத்தினர் மற்றும்
உறவுகள்

# 31ம் நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு
15 . 05 . 1940



இறப்பு
28 . 03 . 2022

## அமரர் N.M. ஜெயரட்ணம் (பிரான்ஸ்)

"வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கின்றோம். இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கின்றோம். ஆகவே வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்குரியவர்களாய் இருக்கின்றோம்" (உரோ 14:8)

காற்றாகி சுவாசத்தில் கலக்கிறேன்
ஊற்றாகித்தாகம் தணிக்கிறேன்
கூற்றாகி வார்த்தையில் வருகிறேன்
பெயராகி முகவரியில் இருக்கிறேன்
ஆதலால் என்னைக் கல்லறையில் தேடவேண்டும்
உங்களுக்குள் நான் இருக்கிறேன்

AD-36

Mrs.P.J.Patrick
Swartz lane
Jaffna.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக
திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவில் துயருறும்
சகோதரர்கள்

# "நன்மை செய்வதன் மூலம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துங்கள்"

### – வின்சென்ற் டி போல் சபையினரிடம் யாழ் ஆயர் –



யாழ் மறைமாவட்டத்தில் உள்ள புனித வின்சென்ற் டி போல் சபையினர் கடந்த 27.03.2022 அன்று தமக்கான தவக்கால யாத்திரையை மேற்கொண்டு பருத்தித்துறை புனித லூர்து அன்னை திருத்தலத்துக்குச் சென்றிருந்தார்கள். அங்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலி மறையுரையிலேயே ஆயர் அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

வின்சென்ற்டியினருக்கான தியானம் காலை 9.15 மணிக்குத் திருச்செபமாலையோடு ஆரம்பமாகியது. ஆரம்பத் தியான உரையை கரவெட்டிப் பங்குத் தந்தை அருட்பணி. C. யஸ்ரின் அடிகளார் ஆற்றியிருந்தார். தவக்காலத்தின் முக்கியத்துவத்தையும், ஊதாரி மைந்தனின் மனமாற்றத்தையும் மையப்படுத்தித் தியானத்தை நெறிப்படுத்தினார். தொடர்ந்து சிலுவைப்பாதைத் தியானம் இடம்பெற்றது. ☞ 11

# மன்னார் ஆயரின் மறைவின் ஓராண்டு நிகழ்வு



மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருட்கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையின் விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் 02ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் உணர்வு பூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நினைவுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து அருட்திரு ம. வி. இ. ரவிச்சந்திரன் அடிகளினால் நினைவுப்பேருரை நிகழ்த்தப்பட்டது. அத்துடன் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட நினைவுப்பேருரை நிகழ்வு அன்றைய தினம் மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்றுது.

தமிழ்த் தேசிய இருப்பில் இராயப்பு யோசப் ஆண்டகையின் "வகிபாகம்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசியல்துறைத் தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் அவர்கள் உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வின் முதன்மை விருந்திநர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, திருகோணமலை மட்டக்களப்பு ஓய்வுநிலை ஆயர் பேரருட்கலாநிதி கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையும், யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

# மல்வம் இளையோரின் தவக்கால யாத்திரை



மல்வம் பங்கு இளையோர்களால் முன்னெடுக்கப்பட்ட தவக்கால யாத்திரை 26ஆம் திகதி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. வவுனியா கல்வாரி திருத்தலத்திற்கு யாத்திரையாக சென்ற இவர்கள் அங்கு திருச்செபமாலை, சிலுவைப்பாதைத் தியானத்தில் பங்குபற்றியதோடு தொடர்ந்து மடுத்திருத்தலத்திற்குச் சென்று அங்கு நடைபெற்ற திருப்பலியிலும் பங்கெடுத்தனர். இந்நிகழ்வு மல்வம் பங்குத்தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்றது.

# நாட்டின் அமைதிநிலை வேண்டி சர்வமத பிரார்த்தனை நிகழ்வு




யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் தற்கால நாட்டின் அசாதாரண நிலைமையினைக் கருத்தில் கொண்டு நாட்டில் அமைதியும் மக்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவும் வேண்டி கூட்டுப் பிரார்த்தனை கடந்த சனிக்கிழமை (02.04.2022) அன்று கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் ஆனைக்கோட்டையில் நடைபெற்றது. இச் சர்வமதக் கூட்டுப்பிரார்த்தனையில் இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் கிராம மக்களும் இளையோரும் பங்குபற்றினர்.

# நாடகக் கீர்த்தி விருது



இலங்கைக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த 27ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டிற்கான அரசநாடக விழாவில் யாழ். திருமறைக் கலாமன்றக் கலைஞர்களில் முக்கியமானவரும் மன்ற நாட்டுக்கூத்துத்துறையின் பொறுப்பாளராகவும் பணியாற்றும் கூத்துக் கலைஞர் கலாபூசணம் யூல்ஸ்கொலின் அவர்கள் நாடக கீர்த்தி விருதினைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம் பாசையூர் பிரதேசத்தை சேர்ந்த கூத்துக் கலைஞரான இவர் இலங்கை நாடகத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை மேன்மைப்படுத்தி நாடகத்துறையின் அதி உச்ச விருதாகிய நாடகக் கீர்த்தி விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# மரியசேவியர் அடிகள் நினைவில் நினைவாலயம்



திருமறைக்கலாமன்றத்தின் நிறுவுனர் கலைத்தூது அருட்கலாநிதி அமரர் நீ. மரிய சேவியர் அடிகளின் விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவின் பல்வேறு நிகழ்வுகள் கடந்த 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. யாழ். திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகளின் தலைமையில் நினைவுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பின்னர் மாலையில் யாழ். நக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலா முற்றத்தில் சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளும், இசை அஞ்சலிகளும், நினைவஞ்சலி உரைகளுடன் "மரியசேவியம்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வும் இடம்பெற்றன. இந்நாளின் சிறப்பு நிகழ்வாகக் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத் திறப்பு நிகழ்வும் நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நினைவாலயத்தைத் திறந்து வைத்தார். அத்துடன் கனடா திருமறைக் கலாமன்றதின் ஏற்பாட்டில் கனடா ரொறன்ரோ தூய ஆரோக்கிய அன்னை பங்கில் நினைவுத்திருப்பலியும் தொடர்ந்து மலரஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
நீக்கிலாப்பிள்ளை அன்ரனி J.P
(Foreman – மேற்பார்வையாளர் கத்தோலிக்க அச்சகம்)

மண்ணில் 11.12.1946 — விண்ணில் 05.04.2022

எம் கத்தோலிக்க அச்சகத்தில் நீண்ட பல ஆண்டுகளாகப் பல்வேறு நிலைகளில் பணி செய்து யாழ். திரு அவைக்கும் நற்பணியாற்றிய அமரர் நீக்கிலாப்பிள்ளை அன்ரனியின் வாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். அவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவதுடன், ஆழ் துயர் கொண்டுள்ள குடும்பத்தினருக்கு எமது நெஞ்சார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆயர், குருக்கள், முகாமையாளர், சக பணியாளர்கள்

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.